ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப் பிரதிவிலை | வெளி நாடு 0-1-6
உள் நாடு 0-1.0

குடி அரசு

வருட சந்தா முன்பணம் — ரூ. 3—0
6-மாத சந்தா ,, — ,, 1-12
வெளி நாட்டிற்கு ,, — ,, 4—0

வாரப்பதிப்பு.

ஆசிரியர் ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | ஈரோடு, சுக்கில ஷு மாசி மீ 19உ (2—3—1930) ஞாயிற்றுக்கிழமை | மலர் 40

சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் நடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்று பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்.

[ஓர்யோகீஸ்வரரின் அநுபவ முறைப்படி தயார்செய்யப்பட்டது.]

உலகப் பிரசித்தி பெற்ற

மஹா சந்தனாதித் தைலம்.

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு. கண்ணில் நீர்வடிதல், கண் பூ. பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டை குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டை சூடு, திரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒரு முறை இந்தத் தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒருமுறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4. 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கைகால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொற்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விருத்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறுசுறுப்பையும் உண்டாக்கும். எவ்வளவு கடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும்; சாபபிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீர்ணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீர்ணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், நாவரோசிகம், மயக்கம், கை கால் குடைச்சல் முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்.

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது. பாலர் விருத்தாப்பியர் யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

குழந்தை மருந்துகள்.

கோரோஜனை மாத்திரை பாட்டல் அணா 8. கஸ்தூரி மாத்திரை பாட்டில் அணா 8. கட்டுவாதி மாத்திரை அணா 8. காரமாத்திரை அணா 8. சுகபேதி மாத்திரை அணா. 8. க்ரப்பான் எண்ணெய் ரூ. 2—0—0 மாந்தக்குடேரி எண்ணெய் ரூ. 1—0—0.

இன்னும் வல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜெண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,
தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

சுயமரியாதை கீதம் அல்லது தத்துவம்.

(இராசிபுரம் எஸ். மல்லிகார்ச்சுனன்)

நடந்த தென்ன சொல்லம்மா என்ற மெட்டு
பல்லவி

1. சுயமரியாதை வாக்கு மனதே
சுதந்திரச் செல்வாக்கு (சுய)
2. சுய நலக்காரர் பின் தொடர்வதை நீக்கு
சூதுகள் வாதுகள் தீதுகள் போக்கு
துயரிலா வழி தனை துரிதமாய் நோக்கு
சொன்னே னிது சத்தியம் சுகமாய் வாழ்வோர்க்கு (சுய)
3. வேதபுராணங்கள் மெய்மெய் யென்றறுத்தும்
வேள்விகள் செய்தாடுமாடுகளறுத்தும்
பாதகஞ் செய்திடும் மாக்களை வெறுத்தும்
பாரினில் யாவர்க்கும் நல்லறிவுறுத்தும் (சுய)
4. முகத்திலும் தோளிலும் தொடையிலும் காலிலும்
முன்னாலீனரென்றே முறையிடும் வேதம்
அகத்திலாராய்ந்திது அனுபவ முறைக்கும்
அறிவிற்கு மொவ்வாதென்றுரைத்திடும் நீதம் (சுய)
5. கல்லையும் மண்ணையுங் கடவுளென்றேற்றும்
கசடர்கள் வார்த்தையை கனவிலும் தூற்றும்
சொல்லுதற் கரியதோர் சோதியைப்போற்றும்
சுத்தமெஞ்ஞான சன்மார்க்கத்தை யூற்றும் (சுய)
6. பாரதம் முதலிய கதைகளையுள்ளம்
படிந்து நன்காய்கதே விலக்கிடுங்கள்ளம்
சாராதா சட்டத்தை தலைதனிற் கொள்ளும்
சாதியும் சமயமும் பேதமும் தள்ளும் (சுய)
7. ஆண்களுக்குப் பெண்கள் அடிமையைத்தடுக்கும்
அவனியில விதவைகள் அழுகுரல் விடுக்கும்
மாண்புடனிந்தியா மடமையைக் கெடுக்கும்
மதிப்புடனொற்றுமை மூக்கமு மளிக்கும் (சுய)
8. புரோகிதம் முதலியசடங்குக ளொழிக்கும்
புலையர் நீச ரென்ற பெயரினை யழிக்கும்
விரோதமதான பார்ப்பனியங் கழிக்கும்
விளம்பிடும் தண்டமிழ் நாடு செழிக்கும் (சுய)
9. உயர்வு தாழ்வெனும் வேற்றுமை யோட்டும்
ஒற்றுமையாய் மக்கள் உய் வழிகாட்டும்
அயர்விலா அறிவுபுத்த முறினையூட்டும்
அரசாம் ஜார்ஜ்ஜின் ஜெயக்கொடி நாட்டும் (சுய)
10. "குடி அரசு" திராவிடன்" தொண்டனையிய்ந்து
கொடுங்கோன்மை செலுத்திடும் சாரார் மேற்பாய்ந்து
திடமுடன் சூத்திரச் சுருதியைக் காய்ந்து (சுய)
ஜெயக்கொடி பிடித்துப்புகழு மாராய்ந்து
11 இப்பெருமியக்கத் தலைவராம் ஈ. வெ.
இராமசாமி யென்றுரைக்குமிப்பூவே
செபமிடும் சிறப்புடன் விருப்பொமடென்றுவே
செந்தமிழ் மல்லிகார்ச்சுனன் பாவே. (சுய)

தொடரும்

நோட்டீஸ்.

1930—31-ம் வருஷத்துக்கு இராமநாதபுரம் ஜில்லாபோர்டு ரோடுகள் பரிபாலனம் செய்ய மெயின்டிநென்ஸ் வேலைக்கும் ஸ்பெஷல் வேலைக்கும் ரோடு சாமான்கள் சப்ளை செய்வதற்கு 1930-ம் வருஷம் மார்ச்சு மாதம் 7-ம் தேதி வரை டெண்டர்கள் தேவை. மேற்படி டெண்டர்கள் சிலிட்ட கவர்களில் போடப்பட்டு கவரின்மேல் இன்னரோடு வேலைக்காக என்று தெளிவாய் எழுதப்பட்டு நேரிலாவது அல்லது ரிஜிஸ்டர் போஸ்ட்டு மூலமாவது மதுரையிலிருக்கும் இராமநாதபுரம் ஜில்லா போர்டு பிரசிடெண்டார்கள் பேருக்கு அனுப்பப்படவேண்டும். சாமான்களின் விபரம் முதலியவைகள் மதுரையிலிருக்கும் இராமநாதபுரம் டிஸ்டிரிக்ட் போர்டு இஞ்சினீயர் ஆபிசிலும் அல்லது டெண்டர்போடும் ரோடு சம்பந்தமான அசிஸ்டண்டு இஞ்சினீயர் அல்லது ஓவர்சியர் ஆபிசிலும் எல்லா ஆபிசு நாட்களிலும் ஆபீசு நேரங்களில் தெரிந்துகொள்ளலாம். ஒவ்வொரு டெண்டருடன் டேவணித் தொகை ரூ. 200 கட்டி கஜானா இரசிது அனுப்பப்பட வேண்டும்.

இராமநாதபுரம் ஜில்லா போர்டு ஆபீசு மதுரை 18—2—30

W. P. A. சௌந்திரபாண்டியன்,
பிரசிடெண்டு.

உயர்வும் உத்திரவாதமுமுள்ளது!

உலகப் பிரசித்தி பெற்ற

மாயவரம் R.S. கிருஷ்ண அண்டுகோ.

ஸத்குரு சிங்கச் சந்தனாதி தைலம் பிருங்காமலகத் தைலம் அரைக்கீரை விதைத் தைலம்.

முதலியவைகளே! உங்கள் கண்ணுக்கும் மூளைக்கும்குளிர்ச்சியைத் தந்து திரேக ஆரோக்கியத்திற்கு குணம் தரத்தக்கது.

இவைகளைப் பல வருஷங்கள் அநுபவமுடைய தேர்ந்த நிபுணர்களால் உயர்ந்த பச்சிலை மூலிகைகளைக் கொண்டு ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இவைகளை ஸ்நானம் செய்து வருவதால் சிரசைப்பற்றிய நோய்களைப் போக்கி திரேகத்திற்கு குளர்ச்சியையும், நருமணம்புகம்பும் சுகந்த பரிமள வாசனையையும் கொடுக்கத்தக்கது.

அநேக பெரிய மனிதர்களாலும், டாக்டர்களாலும், பத்திரிகாசிரியர்களாலும், தேசிய மாபெரும் தலைவர்களாலும் உபயோகித்துச்சிபார்சு செய்யப்பட்டவை.

ஒரே முறை பரீட்சியுங்கள், பரிட்சைக்கு உத்திரவாதமுள்ளது.

மலாய் நாட்டில் கிடைக்குமிடம்:—
பி. கோவிந்தசாமி பிள்ளை,
48-50, சிரங்கன் ரோடு,
சிங்கப்பூர்.

ஆர். சந்தானகிருஷ்ணன்
ஷாப் அண்டு சந்தனக்கடை,
மாயவரம்.

ஸ்ரீ கிருஷ்ண பரிமள ஸ்டோர்

எங்களிடம் கோடையின் வெப்பத்தை தணித்து குளிர்ச்சியை உடனே கொடுக்கக் கூடிய அருமையான மூலிகைகள் சேர்ந்த சந்தனாதி தைலம் கூந்தலை கருநிறமாக்கி பள பளப்புடன் வளரச் செய்வதற்கு அறைக்கீரை விதைத்தைலமும் இன்னு மநேக வாசனை சாமான்களும் குல்கந்து பல காய் கரி ஊர்காய்களும் கிடைக்கும்.

சந்தனாதி தைலம் டின் 24 ரூபாய் எடை உள்ளது ரூ. 1—0—0
அறைக்கீரை தைலம் ஷி எடை 1—2—0
கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்

ஸ்ரீ கிருஷ்ண பரிமள ஸ்டோர்
வலங்கைமான் (Via) கும்பகோணம்.

அடுத்த ஜென்மம் என்பது
முடிச்சுமாறிகள் பேச்சு

முன்னேற்றம்.

இஃது சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக்கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் ஆசிரியர்-வே.சி.நாராயணசாமி
இதன் சந்தா ரூ. 4—0—0 அல்லது ஷி. 2—25

விலாசம்:— மானேஜர், "முன்னேற்றம்"
[எப்] 155, சிலிசிரோட், சிங்கப்பூர்.

WANTED.

Candidates for Telegraph and Station Master's Classes

Full particulars and Railway Fare Certificate on annas stamp.

Apply to.—
Imperial Telegraph College, Nai Sarak, Delhi 63

வைத்தியம்.

முன் தொடர்ச்சி

கைவல்யம்.

முன் நாம் வைத்தியர்களுக்கு மரியாதையும் உபசாரணையும் செய்வது போல அவர்களுக்கு ஊதியம் கொடுப்பது செல்பம் இப்பொழுதிருப்பதுபோல் வைத்தியர்களின் அபிப்பிராயத்திற்கும் வந்துபோவதற்கும் கூலி கொடுக்க வேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை. ஒரு நாட்டு வைத்தியன ஒருவனுடைய வியாதியைக் குணப்படுத்தி நோயாளிக்குத் தலைக்குத் தண்ணீர் விட்ட பின்னே தான் மரியாதை செய்வது வழக்கம்: அவசரத்திற்கு வேண்டிய மருந்துகளெல்லாமவைத்தியனிடமேயிருக்க வேண்டும். நோயாளி செத்துப்போனால் மருந்துச் சிலவும் வைத்தியம் பார்த்ததற்குக் கஷ்டக்கூலியும கொடுப்பதும் கேட்பதுமில்லை. அவ்வீட்டாரிடம் பின் ஒரு சமயம் வைத்தியனுடைய தேவைக்கு மரியாதையோடு கூடின யாசகமாக எதாவது பெற்றுக்கொள்ளலாம். வியாதி சௌக்கியமாகி எண்ணை தேய்த்துக் குளித்தவுடன் சூரணம், லேகியம், தைலம் முதலிய மருந்துகள் செய்யவேண்டுமென்று பத்து ரூபாய் வாங்கினால் அதில் நாலு ரூபாய் மிச்சப்படுத்தவும் நெய். பால், தேன முதலியவைகளில் சிறிதுதான் உபயோகப்படுத்திக்கொள்ளுவதுமே நாட்டு வைத்தியர்களிற் சிலர் செய்து வந்த காரியமாகும். இப்பொழுதோ சில இங்கிலீஷ் டாக்டாகள் இன்ஜக்ஷன் என்னும் முறையில் ஆளைப் பொருத்து ஏமாற்றுவது சகஜமாக விருக்கிறது.

வியாதிக்கு மருந்தை தேக ரத்தத்திற்குள் செலுத்துவதே இன்ஜக்ஷன். வியாதிக்கு உண்ணும் மருந்து ஜீரணமாகி ரத்தத்தில் கலந்து வியாதியை சௌக்கியபடுத்துவதை விட நேராக இரத்தத்திற்கே மருந்தைச் செலுத்தி வியாதியைச சொக்கியப் படுத்துவதே இன்ஜக்ஷன் என்பதை இன்னும் நம்மில் அநேகர் அறியார்கள். இன்ஜக்ஷனால் ஏமாந்த சில இங்கிலீஷ் டாக்டர்களுக்கு அனுகூலமாகஇருந்த மருந்து நியு ஸால்வசான் இந்த மருந்து ஜப்பான் டாக்டர் ஒருவரால் பல நாள் முயற்சியில் ஜெர்மனியின் மருந்து சாலையில் கண்டு பிடிக்கப்பட்டது. முதலில் இந்த மருந்து பல கெடுதல்களை உண்டுபண்ணினதாக பல டாக்டர்களின் ரிப்போர்ட்டால் பரிசோதிக்கப்பட்டு இப்பொழுது சுத்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதனால் 'புது' நியூ ஸால்வசான் என்கிறபெயர் உண்டாயிருக்கிறது. முன் இந்த மருந்தை தசை அதிக மிருக்குமிடமான துடைக்கு மேல் குத்தினார்கள். குத்தி சிறிது நேரத்திற்கெல்லாம் வலி எடுத்து நாலைந்து மணிநேரம் நோயாளி அதிக கஷ்டப்படுவான். இரண்டாமுறை இன்ஜக்ஷன் கொடுப்பதானால் நோயாளி பயந்து நடுநடுங்குவான். இப்பொழுது அந்த மருந்தை இரத்தக்குழாயின் வழியே செலுத்துகிறார்கள். நோயாளிக்கு உபத்திரவ முண்டாவதில்லை சிலருக்குச் சிறிது ஜுரம் காணும். இஞ்ஜக்ஷன் செய்கையில் அந்த மருந்து இரத்தக்குழாயை விட்டு கீழே ஒரு சிறு துளி சிந்தி விட்டால் சிந்தின இடம் வீங்கி விடும். மூத்திரம் மார்பு முதலியவைகளைச் செவ்வையாகப்பரிசோதித்து சிறஞ்சியை சுத்தம செய்து ஊசியை எரியும் நெருப்பில் பொசுக்கி மருந்து குத்துமிடத்திற்கு சுத்தம் செய்யும் திராவகம் தடவி வியாதிக்குத் தக்க அளவு மருந்தை நிர்ணயம் பண்ணி இன்ஜக்ஷன் செய்யாவிட்டால் நோயளிக்குப் பெருந்துன்பத்தை உண்டுபண்ணும். உண்டுபண்ணியும் இருக்கிறது. முன் பின் ஆலோசனையும், மற்ற உயிர்களின் பேரிலுள்ள பொருப்பும், அலட்சிய புத்தி இல்லாமையும் தான் படித்தப் படிப்பின் தன்மையும உணர்ந்த டாக்டர்கள் தவிர மற்றவர்களெல்லாம் இவ்விஷயத்தில் சரியாக நடக்க முடியாது. இவர்கள் செய்த குற்றம் சில சமயங்களில் நோயாளிக்கு தோஷத்தைச் செய்யாததினாலும், வைத்தியனுலுண்டாகும் குற்றத்திற்கு கோட்டுக்குப்போய் பரிகாரம் தேடும் வழக்கம் மேனாட்டைப்போல நம்மிடமில்லாதிருப்பதினாலும், வைத்தியன் செய்யும் குற்றமும் அதன் விஷயமும் நமக்குத் தெரியாத காரணத்தாலும், தாட்சண்யமும அதனால் ஓரம் சொல்லும் குணமும் நமது பெரியவர்களிடமும் காணுவதாலும், எல்லாக் குற்றத்திற்கும் கடவுள் பொருப்பாளியாக விருக்கிறார் என்று தன் காரியத்திற்கல்லாமல் அன்னியருக்காகப் பேசும் வேதாந்தமும சேர்ந்து வைத்தியத்தின் முறை தவறின வைத்தியர்களுக்கு அனுகூலமாயிருக்கின்றன.

இங்கிலீஷ் டாக்டர்களால் கண்டு பிடிக்கப்பட்ட மருந்துகளில் ஸால்வசான் ஒரு முக்கியமான மருந்து. இந்த மருந்து பாஷண சம்பந்தமுடையது. மேக வியாதி யென்று சொல்லப்படுவதின் ஒரு பாகமான அரையாப்பு, புண், கிரந்தி, சூலை முதலியவைகளைக் குணப்படுத்துவதில் இந்த மருந்து விசேடப்பட்டது. அந்த வியாதியை இங்கிலீசில் சிப்பிலிஸ். என்று சொல்லுவார்கள் இந்த வியாதி விபசார தோஷமுடையவர்க்கேதான் வரவேண்டுமென்பதில்லை. தாய் தகப்பனுக்கிருந்தால் பிள்ளைகளுக்கும் வந்து விடும். இந்த வியாதியையுடையவனிட மிருக்கும் கிருமிகள் சுத்தமான தேகத்தை உடையவர்களின் சாதாரண சிறு காயங்களின் வழியாகச் சென்று அவனுக்கும் வியாதியை உண்டாக்கி விடும். இவ்வியாதியஸ்தனுக்கு ஆப்ரேஷன் செய்யும் சமயங்களில் டாக்டர்களுக்கு அக் கத்தியால் இரத்தம் வரும்படியான சிறு காயங்களேற்பட்டாலும் அதன் வழியாக அந்தக்கிருமிகள் சென்று அந்த வியாதியை உடனே உண்டாக்கிவிடும். முன் ஏழு தலை முறை அந்த வியாதித் தொடர்ந்து வருமாம். இதனாலே தான் நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்கு இவ் வியாதி இருக்கின்றன. என்றாலும் இவ்வியாதி இருப்பவர்கட்கெல்லாம் வெளிக்குத் தோன்றுவதும் இல்லை உபத்திரவப்படுத்துவதும் இல்லை சிலருக்கு அதிகமாகத் தோன்றும். சிலருக்கு தோன்றி அடங்கியும் சிலரின் தேக அமைப்பால் அவ்வியாதியின் கிருமிகள் விருத்தியாகாமலும் சிலருக்கு உண்டாகும் வேறுவியாதிகளைப் பலப்படுத்திக் கொண்டும் சிலருக்கு அவ்வியாதி சிறுவயதிலேயே இரத்தக்குழாய் நரம்புகள் முதலியவைகளைத்துர்ப்பலப்படுத்தி பாரிசவாய்வை வாலிபத்திலேயே கொண்டு வந்து விடுகின்றன. இன்னும் சிலருக்கு வியாதிகளுக்கெல்லாம் மூல காரணமாக. விருந்து கொண்டுபல வியாதிகளை உண்டாக்கிக் கொண்டேயிருக்கிறது கணவலி தவிர கண்ணில் சிகப்பிருந்து கொண்டிருந்தால் கண் போய்விடுமோவென்று பயப்படுவதற்கும இவ்வியாதியின் கொடுமையே காரணம் இவ்வியாதி பெண்களை கெர்ப்பமடையாமல் செய்து விடுகிறது. இவ்வியாதியின் கொடுமையினால் பெண் என்னும் பூமியும்ஆண் என்னும் விதையும் பயிரென்னும் குழந்தையை உண்டாக்கச் சக்தியற்றுப் போகின்றன. உண்டானாலும் அவை துர்ப்பலமாகவும் வியாதியுடையதாகவும் ஆய்விடுகின்றன.

நமது நாட்டில தேவதாசியிருக்கும் வழக்கம் அந்த வியாதியைப் பரப்புவதற்கு வெகு அனுகூலமாயிருக்கிறது அதனால் ஒரு பாவமும் அறியாமல் வீட்டிற்குள்ளிருக்கும் பெண்களுக்கும் அவவியாதி பற்றிக் கொண்டது. கோவில் அர்ச்சகர்களுக்கு தேவதாசிகள் சொந்தம். கோவில் அர்ச்சகர்கள் தேவதாசிகளிடம் தப்பான வழியில் சிநேகம் கொண்டிருப்பதற்காக அவர்கள் அர்ச்சனை செயயும் தெய்வத்திற்கோ அவர்கள் படித்த ஆகம சாஸ்திரத்திற்கோ பக்தர்களுக்கோ அதைத்தடுக்கஅதிகாரமில்லை. ஆனால் அர்சசகர்களிடமுள்ள அவ்வியாதியின் கிருமிகள் பிரசாதத்தின் மூலமாய் பிரசாதத்தோடு பிரசாதமாய் பக்த கோடிகளிடம் பரப்பப்படுவது எந்தப் பிரார்த்தனையாலும் நிருவதுமில்லை மேகவியாதியை உடையவன் வைதிக கருமத்திற்கு இதனாலேயே ஸ்மிருதியால் தள்ளப்பட்டான் தேர் திருநாள்களில் பல வியாபாரம் நடப்பது போலவே இவ்வியாதிகளைக் கொடுத்து வாங்கும் வியாபாரமும் விர்த்தியாகிக் கொண்டே வருகின்றன.

இந்தக் கொடிய வியாதி அநேகரைப் பற்றிக் கொண்டு பலவியாதிகளுக்குப பின்னாலிருந்து பலரைத் துன்புறுத்தியும் பலரைக் கொல்லுவதாகவுமிருக்கின்றன. இந்த வியாதி ரசத்தாலும் பாஷாணத்தாலும் செய்யப்பட்ட மருந்துகளாலேயே கொல்லப்படும். அதனாலேதான் நமது தேசத்து வைத்தியர்களையும் வைத்தியம் தெரியுமென்று சொல்லும் சந்நியாசிகளையும் ரசபஸ்பமும் பாஷாணக்கட்டும் செய்யத் தெரியுமாவென்று கேட்பது வழக்கம். இந்த வியாதிகளுக்கு அநேக நாள்களுக்கு முன்னே நமது நாட்டில் சரியான மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதைக் கண்டுபிடித்தவர்கள் சித்தர்கள் அதனாலேயே நமது தமிழ்நாட்டு வைததியத்தியத்திற்கு சித்தர் முறையென்றும் சித்த வைத்தியமென்றும் பெயர் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அநேகமாக ரசபாஷாணங்களே அவர்கள் மருந்துகள். அந்த மருந்துகளை பஸ்பமாகவும் செந்தூரமாகவும் மாத்திரையாகவும் எண்ணையாகவும் பலமாதிரியாகச்சொல்லியிருக்கிறார்கள். அவர்கள்சொன்ன எண்ணை முறைகளில்பல முறைகள் பல கிராமங்களில் பல முறைகளாக இருந்து கொண்டு அவ்விடங்களிலுள்ள இவ்வியாதிகளை குணப்படுத்திக் கொண்டு வருவதை இன்றும் காணலாம். சென்னையில் இவ்வியாதி தீர்க்கப்படாமல் கிராமங்களிலிருக்கும் எண்ணையால் தீர்ந்தது எனக்கும் பலதெரியும். நாட்டு மருந்து சாப்பிட்டால் வாய் வெந்து பல் போயிற்று என்பார்கள் வாய் வெந்தால் தான் மருந்து பிடித்து வியாதியைக் கண்டித்ததென்று நாட்டுவைத்தியர்கள் சொல்லுகிறார்கள். இது உண்மைதான். வாயெல்லாம் புண் ஆனால்தான் அந்த மருந்து ரத்தத்தில் கலந்து அந்த வியாதியின் பூச்சிகளைக் கொன்றதற்கு அறிகுறி. வாய்ப்புண் மூன்று நான்கு நாளில் குணப்பட்டு விடும் அதற்கு மருந்தும் அந்த வைத்தியர்களுக்கும் தெரியும். இந்த வியாதிக்கு ரசபாஷாண மருந்துகளைத் தின்று வாயெல்லாம் புண்ணானால் அதனால் பெரும் கஷ்டப்படும் நோயாளியின் கஷ்டத்தைப் பொருக்காமல் இங்கிலீஷ் டாக்டர்களைக் கூட்டிக் கொண்டு வந்து அவர்கள் வாய் கொப்புளிக்க ஒரு மருந்தும் உள்ளிற்கு ஏதோ ஒரு மருந்தும் கொடுக்கிறார்கள். இரண்டு மூன்று நாளையில் வியாதி குணத்திற்கு வந்து விடுகிறது. இங்கிலீஷ் டாக்டர்களுக்கு பெயரும் பணமும் கிடைக்கின்றன. நாட்டு

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க

இதிகாசங்கள்.

இராமாயணம்—சுந்தரகாண்டம்

கட்டுரை—15

(திரு. சந்திரசேகரப்பாவலர்)

சருக்கங்கள் 61 முதல் 68 முடிய

அங்கதன் அனுமான் முதலிய வீரருடனே புறப்பட்டு மதுவனத்திற்கு வந்து சேர்ந்தான். அது சுக்கிரீவனுக்குச் சொந்தமானது. அவனுடைய மாமன் ததிமுகன் அதைப்பாது காத்து வந்தான். வீரர்களின் வேண்டுகோளின் படி அங்கதன் அவ்வனத்திலுள்ள மதுவைக் குடித்து மகிழுமாறு அவர்களுக்கு ஆணை தந்தான். வானரர்குடித்து அவ்வனத்தை அழித்தார்கள். தம்மைத்தடுத்த ததிமுகனைப் பலவாறு கடித்துத் துன்புறுத்தி வெருட்டினார்கள்.

வானரர் அனைவரும் தேனைக்குடித்து மத வெறி கொண்டு அறிவிழந்தவராயினர். அவர்கள் ஆடினர், பாடினர். சிலர் வாயால் சொல்லமுடியாத ஏதோ ஒரு காரியத்தைச் செய்து சிரித்துக் கொண்டிருந்தனர்! மற்றும் சிலர் சொல்ல முடியாத மற்றொரு காரியத்தைச் செய்தனர்! வேறு சிலர் அப்படிப்பட்ட காரியத்தைச் செய்து அதைப் பிறர்க்குச் சொல்லினர்! வேறுசிலர் மற்றொன்றைச் செய்ய நினைத்தனர். தம்மைத் தடுத்த காவலரை அவர்கள் அடித்து தமது மலத்துவாரத்தை அக்காவலருடைய முகத்துக்கருகில் கொண்டு வந்து காட்டினர். இச் செயல்களை யெல்லாம் அவர்கள் அனுமானுடைய ஆதரவை பெற்றே செய்தார்கள். இவ்விழிந்த செயல்களால் மனம் வருந்திய காவலர் ததிமுகனிடம் கூற அவன் அவரோடும் வந்து எதிர்த்தான். அங்கதன் ததிமுகனை அடித்து மண்டையை உடைத்து விட்டான். ததிமுகன் இராமலக்ஷ்மணருடனிருந்த சுக்கிரீவனை அடைந்து நிகழ்ந்ததுகூறினான். சுக்ரீவன் "நான்முகனால் என்தந்தையாகிய இருட்சரசுக்குக் கொடுக்கப்பட்ட இந்த மதுவனத்தை அனுமனாதியோர் மதுவுண்டு அழித்ததால் அவர்கள் சீதையைக் கண்டுபிடித்தே வந்திருக்கிறார்கள் என அறியலாம். இராம! கவலை ஒழி! மாமா! நாங்கள் அனுமனாதியரைக்காண ஆவலுடையோம். அவர்களை நான் மன்னித்தேன்" என்று கூறினான்.

ததிமுகன் மறுபடி மதுவனம் வந்தான். அங்கே வானரர் குடித்த கள்ளை மூத்திரமாக வெளி விட்டுக் கொண்டிருப்பதை அவன் கண்டான். அவன் அங்கதனை வணங்கி மன்னிப்புக் கேட்டு அவர்களைச் சுக்கிரீவன் உடன் பார்க்க விரும்புவதைக் கூறினான். உடனே அவர்கள் புறப்பட்டார்கள். அவர்களுடைய வரவு சற்று தாமதித்ததால் வருந்தின இராமனைச் சுக்கிரீவன் தேற்றிக்கொண்டிருந்தான். அப்போது அங்கதனும் அனுமானும் பிறரும் அவன் முன் வந்து குதித்தார்கள் அனுமான் "கண்டேன் சீதையை" என்றனன்.

அவர்கள் அனைவரும் சீதையின் வரலாற்றைக் கூறத் தொடங்கினார். இராமன் விரிவாகக் கேட்க அவர்களால் தூண்டப்பட்டு நேரில் கண்டவனாகிய அனுமான் அச்செய்திகளை விவரமாகச் சொல்லி அவள் கொடுத்தனுப்பிய சூடாமணியையும் இராமனிடம் கொடுத்தான்.

இராமன் அதைக்கண்டு மனமுருகி "அவள் என்ன சொன்னாள்" என வினவினான். அனுமான் காக்கையாக வந்து துன்புறுத்திய சயந்தன் வரலாற்றைச் சீதை சொன்னதாக விவரித்துரைத்து அவள் படும்பாடுகளையும் பிற நிகழ்ச்சிகளையும் எடுத்துரைத்தான். "சீதை நாற்றிசைகளிலும் பார்த்துக் கொண்டு தன் ஆடையிலிருந்து இந்தச் சூடாமணியைக் கொடுத்தாள். மிக விரைவில் படை கொண்டு வந்து தன்னை மீட்கும்படியாகவும் சொன்னாள். நான் பலவாறு தேற்றத்தேறி மன அமைதியடைந்தாள்." என்று கூறி முடித்தான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

வானரர்களுக்குக் கட்குடியிலிருந்த வெறியும், அவர்கள் குடித்து விட்டுச் செய்த செயல்களும் மிகவும் அருவருக்கத்தக்கன. சிலர் வாயால் சொல்லமுடியாத காரியத்தைச் செய்தனராம்! செய்து சிரித்தனராம்! வேறு சிலர் அத்தகைய வேறொன்றைச் செய்தனராம்! சிலர் செய்து அதைப் பிறர்க்குரைத்தனராம்! என்னே இழிவான செயல்கள்! வாயினால் சொல்லத்தகாதவைகளாயின் அவைகள் யாவாயிருக்கலாம்? இன்னும் பாருங்கள் தம்மைத் தடைசெய்த காவலரை அடித்துக் கடித்து தமது மலத்துவாரத்தை அவர்களுடைய முகத்தில் கொண்டுவந்து காட்டினார்களாம்! இச் செயல்களைச் செய்தவர்களுள் அனுமன் அங்கதன் முதலிய தலைவர்களும் அடங்குவார்களென்றால் இவர்களின் இழிநிலைதானென்னே!

இவர்கள் தமது அரசனுடைய வனத்தை அழித்ததோடு நில்லாமல் மேலும் குடி வெறியால் மயங்கி அறிவிழந்து தமது அரசனுடைய காவலாளரையே கடித்துத் துன்புறுத்தினார்களென்றால் இவர்களுடைய அறிவு எவ்வளவு தாழ்ந்ததாக இருந்திருக்கவேண்டும்? அன்றி இவ்வித இழி செயல்களை அவர்கள் செய்தார்களென்ற வரலாறு செய்நன்றி யறியாத இயல்பினராகிய ஆரியர்களாலே வேண்டுமென்று இழிவு படுத்து முகத்தான் எழுதி வைக்கப்பெறறதோ என்ற ஐயமும் எழுகின்றது. ஏனெனில் ஆரியர் தம் புகழ்போற்றவும் பிறர் புகழ் கெடுக்கவும் பார்ப்பார்களன்றோ?

இதற்குச் சான்று இவ்விராமாயணத்தில் பற்பல அளவிறந்த மாறுபாடுகளை பிற்கால ஆரியர் செய்து விட்டனரென்ற உண்மையை நாம் பற்பல விடங்களில் எடுத்து திரு. சீனிவாசய்யங்கார் முதலிய ஆரிய ஆசிரியர் கூற்றுக்களைக்கொண்டே நிலை நாட்டியுள்ளோம். சயந்தன் காக உருக்கொண்டு சீதையின் கொங்கைகளைக் குத்தினான் என்ற வரலாற்றை அடையாளமாக அனுமான் இராமனிடம் கூறுகிற இடத்தில் மொழி பெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் பக்கம் 240ல் "இந்த விஷயம் சில ராமாயணயிடங்களில் அயோத்தியா காண்டத்தில் சொல்லப்படுகிறது. அதற்கும், சீதை சொல்வதற்கும், மாருதி சொல்வதற்கும் சில பேதங்கள் காணப்படுகின்றதைக் கவனிக்கவும்" என்று எழுதுகிறார். இவ்விதமான மாறுபாடுகளுக்குக் காரணம் என்னை என்பது சொல்லாமலே விளங்கும். பலர் பலகாலங்களில் தத்தம் மனம்போல திருத்தியும் மாற்றியும் குறைத்தும் புதுவன புனைந்தும் இருத்தல் இன்றியமையாது வேண்டப்படுகின்றதன்றோ? இது போல இவர்கள் பிற நூல்களிலும் கை வைத்துச் செய்துள்ள மா மாயங்கள் அளவிறந்தன வாதல் வேண்டும்!!

வானரர் தாம் குடித்த கள்ளை மூத்திரமாக வெளி விட்டுக்கொண்டிருந்ததைத் ததிமுகன்கண்டானாம்! என்னே பெருமை! இவ்விதவெறுக்கத்தக்க செய்திகளைக் கூறுகின்ற இந்த இராமாயணத்தைப் புண்ணிய நூலெனவும் மக்களிற் சிலர் பாராட்டிப் படிக்கின்றனரே! இதனை அறிவு பெற்ற தமிழ் மக்கள் சிலரும் பாராட்டுகின்றனரே! அதுதான் பரிதாபம்! மேலும் ஆரியரையே எடுத்துக்கொண்டாலும் அறிவாராய்ச்சியே மிகுந்து விளங்கும் இக்காலத்தில் அவர்கள் இந்நூலைத் தமது நூல் எனப் பாராட்டிப் பேச முன் வருவதும் இதனைப் போற்றுவதும் அவர்களுடைய அறிவுக்கு அடுக்குமா என்று அவர்களை வினவுகின்றோம்.

சீதை அனுமனிடம் சூடாமணியைக் கொடுக்கும் போது நாலாதிசைகளிலும் பார்த்துக் கொண்டு பின்னரே அதை அவிழ்த்துக் கொடுத்தாளாம்! இதனாலேயே சீதையினுடைய கள்ள உள்ளம் வெளிப்படுகின்றதன்றோ? இது செய்தி சீதை அனுமனிடம் சூடாமணியைக் கொடுக்கும் போது சொல்லப் பெறுததே! என்னே இவ்வாரியர் தம் மாற்றங்கள்! இனி, கம்பர் போக்கைக் காண்போம்.

ததிமுகன் முதலில் தானே வந்து அடிபட்டோடியதாகவும் பின் தன் காவலரோடு வந்து அடிபட்டதாகவும் இரு முறை வால்மீகி கூற, பின்னதை மட்டுமே கம்பர் கூறினார். ஏனெனில் வால்மீகி கூறுவது அறிவிற்குப் 'பொருந்துமாறில்லை. மதுவனம் நான்முகனால் வாலியது தந்தைக்குத் தரப்பட்டது என்று வால்மீகி கூற கம்பரோ அது இந்திரன் வாலிக்கீந்தது என்று கூறினார். அங்கதன் ததிமுகனை அடித்துத்துரத்தினான் என்று மட்டும் வால்மீகி கூற இரு . கம்பரோ தான் அடித்ததாகச் சுக்ரீவனிடம் போய்ச் சொல்லுமாறு அங்கதன் அவனையும் காவலரையும் துரத்தினான் என்றும் கூறுகிறார். மேலும் சுக்ரீவன் அங்கதனிடம் சென்று மன்னிப்புக் கேட்குமாறும் ததிமுகனை ஏவினானென்றும் அவர் கூறுகிறார். இதுவும் வால்மீகி கூறாததே.

வானரர் செய்ததாக வால்மீகி கூறும் இழி செயல்களை யெல்லாம் கூறாது கம்பர் மறைத்தார். அங்கதன் முதலிய வானரர் அனைவரும் ஒன்று போல இராமன் முன்வந்து சீதைவரலாற்றைக் கூறத் தொடங்கினரென்றும் இராமன் விரிவாகக் கேட்க அவர்களுடைய தூண்டுதலாலே அனுமன் கூறினான் என்றும் வால்மீகி கூற, கம்பரோ இம்முறையை முற்றிலும் மாற்றி அனுமன் எல்லாருக்கும் முன்னாலே போய் வரலாற்றைக் கூறினானென்றும் அவன் கூறி முடித்த போது தான் அங்கதன் முதலிய வானரர்வந்தனரென்றும் கூறுகிறார். அனுமனுக்கு முதன்மை கொடுக்கவேண்டு மென்பதே கம்பருடைய நோக்கமன்றோ?

குடிசையோடும் சீதையை இராவணன் தூக்கிச் சென்றான் என்று கம்பர் தாம் முன் கதையை மாற்றியதற்கொப்ப இங்கும் அக்குடிசையோடு அவளைக் கண்டதாக அனுமன் கூறுகிறான் என்றெழுதுகிறார் மந்திரத்தால் அரக்கியரை உறங்கச் செய்தான் அனுமன் தாம் முன் பொய்யுரைத்ததை வலியுறுத்த கம்பர் இங்கும் அதை அனுமான் இராமனிடம் கூறினன் என மீண்டும் கூறுகிறார்.

அனுமான் இராமனிடம் சீதையைப்பற்றிக் கூறிய சில பாடல்களிலேயே மூன்று இடங்களில் கம்பர் தாம் அடிக்கடிக்கூறி மகிழும்விதமாக வேதிருவடிதொழுதபடலம்பாடல்,63 77[75] களில் முறையே [63]'நீ, கொங்கை இணைக் குவை தன்னின் ஒவ்வாது அண்ணல் வெங்காமன் எய்த அவர் அம்பு தொளைத்த ஆறாப் புண்ணினும் உளை, "என்றும் [75] "மென் கொங்கை வழிகின்ற மழைக் கண் காள்'! என்றும், [77] "ஆன்ற திருமுலைத் தடத்து வைத்தாள்.!' என்றும் கூறி மகிழ்கின

இதன் தொடர்ச்சு 13ம் பக்கம்பார்க்க

உதிர்ந்த மலர்கள்.

எந்த மதத்தில்இருப்பதினால் ஒரு மனிதன் தீண்டப்படாதவனாய் கருதப் படுகின்றானோ அவன் தனக்கு ஒரு சிறிதாவது சுயமரியாதை உணர்ச்சி இருக்குமானால் அவன் தான் எந்த மதத்தைச் சார்ந்தால் உடனே தீண்டப்படாதவனாக கருதப்படமாட்டானோ அந்த மதத்தை சாரவேண்டியது அவனது முதற்கடமையாகும். ஈ. வெ. ரா.

ஏதாவது ஒரு குறிப்பிட்ட மதத்தில் இருந்தால் தான் "கடவுள் அருளோ" "மோக்ஷமோ" கிடைக்கும் என்கிற விஷயத்தில் எனக்கு சிறிதும்ஒப்புதலும்நம்பிக்கையும் கிடையாது. அவ்விரண்டு வார்த்தைகளும் அர்த்தமற்றதும் மோசமும் பரிகாசத்திற்குஇடமானதும் என்பதேஎனது அபிப்பிராயம். ஈ. வே. ரா.

மனுதர்ம சாஸ்திரத்தையும் அதற்கு ஆதாரமான வேதத்தையும் (மத ஆதாரத்தையும்) ஒரு கடவுள் சிருஷ்டித்திருப்பாரானால் முதலில் அந்தக்கடவுளை ஒழித்து விட்டு தான் தாகசாந்தி செய்ய வேண்டும்.

மனுதர்ம சாஸ்திரத்தையும் அதை ஆதரிக்கும் வேதத்தையும் ஒரு மதம் ஆதாரமாய்க் கொண்டிருக்குமானால் முதலில் அம்மதத்தை அழித்து விட்டு தான் மனிதன் வேறுவேலை பார்க்க வேண்டும். ஈ. வெ. ரா.

இந்து மதம் போய்விடுமே! இந்து மதம் போய் விடுமே!! என்று சொல்லிக்கொண்டும் இந்துமததர்மங்களை ஒன்று விடாமல் காப்பாற்ற வேணடும்என்று முயற்சிசெய்து கொண்டும் வந்தவர்களாலேயே இன்று இந்தியாவில் இந்தியர்களில் மூன்றில் ஒரு பாகத்தினர்கள் வேறு மதத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். ஈ. வெ. ரா.

மதத்தைக் காப்பதற்கு என்றும் மதக் கொள்கைகள் சிறிதும் விட்டுக் கொடுக்க முடியாதென்றும் இது வரை செய்து வந்த முயற்சிகளும் கிளர்ச்சிகளும் எல்லாம் இரண்டொரு வகுப்புக்களுடையவும் சில தனிப்பட்ட நபர்களுடையவும் சுயநலத்திற்காக செய்யப்பட்ட முயற்சிகளாகவே முடிந்ததல்லாமல் எவ்வித பொது நலனும் ஏற்படவேயில்லை, ஈ. வெ. ரா.

"மேல்நாட்டாருக்குஒரு மாதிரியும் கீழ்நாட்டாருக்கு ஒரு மாதிரியுமான சுதந்திரங்கள் வித்தியாசங்கள் இருக்க்க கூடாது" என்று சொல்லும் இந்திய தேசிய வாதிகள் தங்கள் நாட்டாருக்குள்ளாகவே பார்ப்பனருக்கு ஒரு மாதிரியும் பார்ப்பனரல்லாதாருக்கு ஒரு மாதிரியும் இடமும் தெருவும் குளமும் ஏன் பிரிக்கின்றார்கள்? பிரித்திருப்பதை ஏன் இன்னமும் சகித்துக்கொண்டிருக்கிறார்கள்? இது யோக்கியமாகுமா? ஈ. வெ. ரா.

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவுக்கு இந்து மதத்திற்கு பிரதிநிதியாய் போகவில்லை ஆனால் அவர் ஒரு "வக்கீலாய்" போனார். ஈ. வெ. ரா.

உன்னை க்ஷத்திரியன் என்றோ வைசியன் என்றோ நீ சொல்லிக் கொள்ளும்போது நீ பிராமணன் என்பவனுக்கு கீழ்ப்பட்டவனென்பதை நீயே ஒப்புக் கொண்டவனாகின்றாய். ஈ. வெ. ரா.

அய்ம்பது வருஷத்திற்கு முன்ஒரு மனிதன் ஒரு ஊருக்குப் போகவேண்டுமானால் பஞ்சாங்கத்தைப் பார்ப்பான் ஆனால் அதே மனிதன் இப்போது பிரயாணம் செய்யவேண்டுமானால் ரயில்வே கெயிடை [காலஅட்டவணையை) பார்க்கின்றான். எஸ். ராமநாதன்.

சென்ற வருஷத்திய ரயில்வே கெய்டை பார்த்துக் கொண்டு ரயிலுக்குப்போனால் வண்டிகிடைக்குமா? ஈ. வெ. ரா.

சுயமரியாதையும் சமத்துவமும் விடுதலையும் வேண்டிய இந்தியாவுக்கு இப்போது வேணடியது சீர்திருத்த வேலை அல்ல மற்றென்னவென்றால் உறுதியும் தைரியமும் கொண்ட அழிவு வேலையேயாகும். ஈ, வெ. ரா.

இது வரை நமது நாட்டில் செய்யப்பட்டு வந்த சீர்திருத்தம் என்பதெல்லாம் பாமர மக்களை படித்தவர்களும் பணக்காரரும் ஏய்ப்பதற்கு கண்டுபிடித்த ஒரு சூட்சியே ஒழிய உண்மை சீர்திருத்தமல்ல. ஈ. வெ. ரா.

குருட்டு நம்பிக்கையின் பயனாய் ஏற்பட்ட கடவுளிடத்தில் மூட பக்தியால் ஏற்பட்ட மதத்தின் மூலம் சுயநலக்காரர்களால் வகுக்கப்பட்ட கொள்கைகளை வைத்து நமது வாழ்க்கையை நடத்துகின்றோம். ஈ. வெ. ரா.

குருட்டு நம்பிக்கையையும் மூட பக்தியையும் சீர்திருத்த வேலையினால் ஒழிக்க முடியாது. ஆனால் அவற்றை அழிவு வேலையினால் தான் ஒழிக்க முடியும் அழிவுவேலை செய்பவர்களுக்கு மகத்தானமன உறுதியும் சிறிதும் சந்தேகமற்றதெளிவும் பழிப்புக்கும் சாவிற்கும் துணிவும் இருக்கவேண்டும். ஈ. வெ. ரா.

அழிவு வேலைக்காரர்களுக்கு நிதானமும் சாந்தமும் சகிப்புத் தன்மையும் அவசியம் வேண்டுமென்பதையும் வெறுப்பும் பிடிவாதமும் கண்டிப்பாய் கூடாது என்பதையும் நான் ஒரு போதும் ஒப்புக் கொள்ளமாட்டேன். ஈ. வெ. ரா.

அன்னியர்கள் நம்மை மதிக்கமாட்டார்களே பழிப்பார்களே எதிர்ப்பு பலமாய்விடுமே நமது செல்வாக்கு குறைந்து போகுமே என்கின்ற பயமும் பலக்குறைவும் உள்ளவர்கள் ஒரு காலமும் சீர்திருத்த வேலைக்கு உதவமாட்டார்கள். ஈ. வெ. ரா.

சீர்திருத்தத்திறகு விரோதமான கட்டுப்பாட்டை உடைத் தெரிவது தான் சீர்திருத்தத்தில் பிரவேசிப்பதற்கு உற்ற பாதையாகும். ஈ. வெ. ரா.

பேய்

உண்டா? இல்லையா?

பேயைப்பற்றிய சில சந்தேகங்கள்

பேய் உண்டு என்று சொல்லும் கனவான்களையும் பேய் ஓட்டும் டிரைவர்களையும் அடியில் கண்ட சந்தேகங்களுக்கு சமாதானம் சொல்ல வேண்டுமாய் வேண்டுகின்றோம்.

பேய் இருப்பது வாஸ்தவமானால் அது அரூபமாய் இருப்பானேன்?

பேய்களில் கொள்ளிவாய் பிசாசு, கருப்பு, முனி, குட்டிச் சாத்தான், பிரம்ம ராட்சு, மோகினி என்கின்ற வைபோன்ற பலவகைப் பேர்கள் சொல்லப்படுவது ஏன்?

இவைகளில் ஒன்றுக்கொன்று ஏதாவது வித்தியாசம் உண்டா?

அவைகளில் ஆண் பெண் உண்டா?

பேய்க்குப் புணர்ச்சி விருப்பம் உண்டா?

அதுதான் அவைகளின் முக்கிய வேலையா?

அப்படியானால் அவைகள் தன் ஜாதிகளாகிய பேய்களிலேயே ஒன்றைச் சரிப்படுத்திக் கொள்ளாமல் மனுஷ ஜாதியைப் பிடிப்பானேன்?

அதிலும் அனேகமாக ஆண் பேய்களே பெண்களைப் பிடிக்கின்றதற்குக் காரணம் என்ன?

சும்மா தெருவிலோ காட்டிலோ நடக்கும் ஒருவனை அடிப்பானேன்?

அதனால் மூக்கிலும் வாயிலும் காதிலும் இரத்தம் வந்து சாவானேன்?

மனிதனை பேய் அடிப்பதற்கு அவன் அந்தப் பேய்க்கு என்ன கெடுதி செய்தான்?

ஒரு பெண்ணைப் பிடிப்பது என்றால் எதற்காக எப்படி பிடிக்கின்றது என்பது நமக்குத்தெரிவதற்கு தெளிவான வழி உண்டா?

புணருவதற்கு என்றால் அரூபம் தொழில் செய்ய முடியுமா?

பெண்களுக்குள் பேய் இருந்து பேசுவது என்பது உண்மையா?

எந்த மாதிரியில் பெண்களுக்குள் இருந்துகொண்டு பேசும்?

அது பேசக்கூடியதா?

பேய்களுக்கு ஜாதியாவது பாஷையாது உண்டா?

பேய்கள் மந்திரத்திற்குக் கட்டுப்படுவானேன்?

அந்த மந்திரங்களுக்கு ஏதாவது பரீட்சை உண்டா?

நிரபராதியான ஒருவனை அடித்துக் கொல்லக்கூடிய சக்தியும் குணமும் உள்ள பேய்க்கு—யாருக்கும் தெரியாமல் மற்றொரு சரீரத்திற்குள் புகுந்து வேலை செய்யும் பேய்க்கு—மற்றொரு சரீரத்திற்குள் புகுந்து அந்த சரீரத்தைத் தன்னுடையதாகச் செய்துகொண்டு பேசும் பேயிக்கு—கட்டடங்களையெல்லாம் அரூபமாய் இருந்து இடித்துத் தள்ளும் பேயிக்கு—தன்னை தொந்திரவு செய்து அடித்துத் துன்புறுத்தும் முதல் கெம்பர் திருட்டுப் பசங்களான ஒரு மந்திரவாதியையோ சாந்தி கழிக்கும் சாந்திவாதியையோ அல்லது அர்த்தமற்ற வார்த்தைகளைச் சொல்லி உடுக்கை அடித்து மணிபாட்டும் மூடசிகாமணியாகிய ஒரு உடுக்கைவாதியையோ கண்டு நடு நடுங்கி நான் போரேன் நான் போரேன் தங்களைவிட்டு நான் போரேன் என்று கதருவானேன்?

அவர்கள் சொன்னபடி யெல்லாம் கேழ்ப்பானேன்?

ஆடுவானேன்?

பாடுவானேன்?

ஒரு குறிப்பிட்ட கோவிலுக்கோ, இடத்திற்கோ போனால் மாத்திரம்ஆடுவானேன்? அங்குஎறிகிறதுஎறிகிறது என்று கத்திக்கொண்டு குதிப்பானேன்? து. ஜ.

ராமராஜியத்தையும், வருணாசிரமத்தையும் ஆதரிக்கும் திரு. காந்தியினால் இந்தியாவுக்கு விடுதலை சம்பாதித்துக்கொடுக்கமுடியாது. ஈ. வெ. ரா.

பிரயாணிகளின் கஷ்டம்

பாலக்காடு கோயமுத்தூர் பஸ் சர்விஸ் டிரைவர்களின் அஜாக்கிரதையாலும், தற்செயலாய் ஏற்பட்ட சம்பவங்களின் பயனாலும் பிரயாணிகள்கஷ்டப்படுகிறார்கள். விடத்துக்கு காரணமாய் இருந்தவர்கள்மீது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுவதில் யாருக்கும் ஆக்ஷேபனை இல்லை. ஆனால் அந்தவழியில் போய்க்கொண்டிருந்த மற்ற பஸ்களின் லைசென்சுகளை கேன்சில் செய்துவிட்டதால்போக்கு வருத்து ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்று பாலமுருகர் எழுதுகிறார்.

மதன லீலா படங்கள்

64 வகை சிற்றின்ப ரகசியஉருவ ஒரிஜினல்போட்டோபிலேஸ் படங்கள் சதிபதிகளும் தனிமாதர்களும்கூடியது. அழகியஆல்பம் உள்பட விலை. 5—0—0

ஜே. ஜி. அண்டு சன்ஸ்,
வேப்பேரி, மதராஸ்.

முந்துங்கள்! முந்துங்கள்!

வெகுசரசம்

ஞான சூரியன்.

விலை

0—4—0 அணா

10-புஸ்தகத்திற்கு ஒரு புஸ்தகம் இனாம்.

குடி அரசு பதிப்பகம்,
ஈரோடு.



திரு. ஈ. வெ. ராமசாமியாரின் மலாய் சுற்றுப்பிரயாணத்தில்

தம்பினுக்கு அடுத்த சுங்கைஜன்வ எஸ்டேட்டை பார்வை இடச்சென்றபோது மேல்படி எஸ்டேட் மானேஜர் திருச்சி திரு. சுந்தர ராஜுலு நாயுடு அவர்களால் வரவேற்று டீ பார்ட்டி நடத்தி உபசரித்த காட்சி

உட்கார்ந்திருப்பவர்கள்:— 1. .... 2. மானேஜர், திரு. எஸ். சுந்தரராஜுலு நாயுடு, 3. திரு. எஸ். ராமநாதன் 4. .... 5. நாகம்மையார், 6. ஈ. வெ. ராமசாமியார், 7. திரு. சடகோப நாயுடுகாரு 8. திருமதி அய்யாரு, 9. திரு. அய்யாரு, 10. சுவாமி அர்புதானந்தா. 11. ....



பினாங்கில் திரு. ஈ. வெ. ராமசாமியாரையும் கோஷ்டியாரையும் வரவேற்று 3000 ரூபாய் வரை செலவு செய்து உபசரித்த முதலாளி ஜனாப் முகம்மது ராவுத்தர் அவர்கள் சிங்காரத்தோட்டத்தில் எடுத்தகாட்சி

உட்கார்ந்திருப்பவர்கள்:— 1. ஜனாப் முதலாளி முகம்மது ராவுத்தர், 2. திரு. ராமநாதன், 3. ஈ. வெ. ராமசாமியார் 4. நாகம்மையார் ஜனாப் முதலாளி முகமது ராவுத்தருக்குப் பின்னால் நிற்பவர், ஜனாப் டி. வி. மகம்த் பூசப் ராவுத்தர் நாகம்மையாருக்கு பின்னால் நிற்பவர் கப்பல் முதலாளி. ஜனாப் சீனி ராவுத்தர். மற்றும் திருவாளர்கள், பொன்னம்பலம், சாமி சிதம்பரனார், நடராஜன் சுந்தரராஜுலு முதலியோரையும் காணலாம்.

குமரன் பிரைஸ் சீட்டு.

குமரன் சந்தாதாருக்கு
500 ரூபாய் இனாம்

—0—

நாளிது தை 10 உ முதல் பங்குனி 30 உ வரை
சேரும் புதிய சந்தாதாருக்கு மட்டும்

—0—

குறிப்பிட்ட தேதிக்குள் 500 சந்தாதாருக்குக் குறையாமல் சேரக் கூடுமென்றெதிர்பார்க்கப் படுகிறது. இந்த ஐநூறு சந்தாதாரிடம் வசூலாகும் தொகையிலிருந்து எடுக்கப்படும் 500 ரூபாவுக்குப் பின்வருமாறு பிரைஸ் கொடுக்கப்படும்.

முதல்	பிரைஸ்	ரூ.	100
இரண்டாவது	,,	,,	50
மூன்றாவது	,,	,,	25
நான்காவது	,,	,,	15
ஐந்தாவது	,,	,,	10
6 முதல் 65-வரை ரூ. 5 வீதம் சீட்டு 60.		,,	300

நிபந்தனைகள்.

1. சுக்ல-ஆம் பங்குனி-மீ 30-உக்குள் ஆபீசுக்குப் பணம் வந்து சேரவேண்டும்.

2. சுக்ல-ஆம் தை-மீ 10-உ யிலிருந்து மேற்படி ஆம் பங்குனி 30-உ வரை முன்பணம் செலுத்திச் சேரும் வாரப் பதிப்பு ஜீவிய சந்தாதார்களும், மேற்படி பதிப்பு சாதாரண சந்தாதார்களும் சீட்டிற் சேர்க்கப் பெறுவர். சாதாரண சந்தாதார் ஒரு வருஷ சந்தாவுக்குக் குறையச் செலுத்தினால் சேர்த்துக் கொள்ளப் பெறமாட்டார்.

3. வி. பி. மூலம் சேரும் சந்தாதாரும் ஏற்கனவே இருந்துவரும் சந்தாதார்களும் இதிற் சேர்க்கப் பெற மாட்டார்கள்.

4. பிரமோதூத-ஆம் சித்திரை-மீ 1-உ குமரனாபீசில் ஐந்து பிரமுகர்கள் முன்னிலையில் சீட்டுகள் குலுக்கி யெடுக்கப்படும்.

5. பிரைஸ் தொகையை நேரிலும் பெற்றுக்கொள்ளலாம். இல்லாவிட்டால் அவரவருக்கு மணியார்டர் கமிஷன் கழித்தும் பாக்கி நேரே அனுப்பிவிடப்படும்.

6. இந்த ஐந்து பேரிருந்து செய்யும் தீர்ப்பே முடிவானதாகும்.

7. பிரைஸ் கிடைத்தவர்கட்கும் மற்றவர்கட்கும் வழக்கம்போல் பத்திரிகை அனுப்பப்படும்.

8. புதிதாகச் சேரும் சந்தாதார் தொகை 500-க்கு மேற்பட்டால் சந்தா ஒன்றுக்கு ஒரு ரூபா வீதம் சேர்த்து பிரைசில் பணவரவு அதிகப்படுத்தப்படும். குறைந்தாலும் அப்படியே பிரைசில் பணவரவு குறைக்கப்படும். எப்படியானாலும் குறிப்பிட்ட 65-பேருக்குச் சீட்டு விழுதல் கூடும்.

8. பிரைஸ் பெற்றவர் விவரம் சித்திரை மாத முதல் வாரக் குமரனில் வெளியிடப்பெறும்.

மானேஜிங் டைரக்டர்,
தனவைசியன் கம்பெனி லிமிடெட்,
காரைக்குடி.

குமரன் வாரப் பதிப்பு சந்தா.

உள் நாட்டுக்கு	ரூ.	5—0—0
வெளி நாட்டுக்கு	,,	6—0—0
ஜீவிய சந்தா	,,	100—0—0

இந்து மார்க்கம்

நாடார்குல மித்திரனுக்கு மலாய் நண்பர் ஒருவர் அனுப்பிய நோட்டீசுக்கு மித்திரனின் பதில்

"மலேயா நண்பர்கட்கு எமது நன்றி என்றும் உரித்தாகுக. அறிவின ஆராய்ச்சியில் நீங்கள் கூர்ந்து நிற்பது பற்றிப் பேருவகை எய்துகிறேன். நீங்கள் அனுப்பிய நோட்டீசுக்குத் தமியேன் பின் வருமாறன்றி வேறு எத்தகைய பதிலுந்தர விரும்பவில்லை.

'இந்து மார்க்கம்' எனக்கூறும் ஒருவரைப்பற்றி நீங்கள் கவலை கொள்ளற்க. அவர் சுருங்கக் கூறின் 'பல வேஷக்காரர்' நீங்கள் அனுப்பிய நோட்டீசில் புத்த மார்க்கம் கிறிஸ்துமார்க்கம் யாவும் இந்து மார்க்கப் பிரிவுகளெனக் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது. கடவுள் என ஒருவர் உண்டு என நாம் விவாதிப்பின் அவர் சித்தாந்தம் பேசுவர். கடவுள் உரு இல்லை. யாவும் இயற்கை என நாம் கூறின் அவர் அத்வைத வேதாந்தம் பேசுவர். நாம் அறிவே தெய்வமெனக் கூறின் அவர் ஞான காண்டம் கூறுவர். இவ்வாறு இந்து எனத்தன்னைக் கூறுவோர் எவ்விதக் கொள்கையும் இன்றி எதிர்த்தவன் கூறும் கொள்கைகளெல்லாம் தன்னிடமிருப்பதாகக்கூறிக்கொண்டு, அதற்கு எதிரானவைகளையும் பாவ மூட்டைபோல் மனத்தில் மறைத்து வைத்திருப்பர். மருந்து விபரம் தெரியாத மடவைத்தியனொருவன் எவ்வியாதிக்கும் எம்மருந்தையும் கொடுப்பது போல, ஒரு இந்துவும் சமயத்திற்குத் தக்க பேசித் தப்பித்துக்கொள்வான், உண்மையை உரைக்குங் காலத்து இந்து மதம் என ஒரு மதமே இருப்பதாகத் தெரிகிறதில்லை. எந்த மத நூலிலும் இந்து மதம் எனக் குறிப்பிடவும் காணோம். ரயில்வே ஸ்டேஷன் கக்கூஸ்களிலும் கிளப்புகளிலுமட்டுமே 'இந்து பிரயாணிகள்' என்ற போர்டு பார்க்கலாம்.

இந்து எனக் கூறுவாரிடம் கடவுள், 'ஆன்மா' வழிபாடு, உயிர் முன்பதைப் பற்றி முதலாவது அவருடைய கருத்தை எழுதி வாங்கியே, பின்னர் எதிர்க் கேள்வி புகுத்த முடியும் இன்றேல் இந்து 'உனக்கும் பேபே, உங்கள் அப்பனுக்கு பேபே' என்னும் பிரகாரம் எங்கும் எச்சார்பு பற்றியும் பேசிக்கொள்வார். இந்து என்பதன் பொருள் பல வேஷக்காரன் என்பதே. சில்லரை நடிகர் மேடையிற் பல வேடமும் கட்டிக்கொள்வதுபோல் இந்து என்பவன் எம்மதத்தையும் தன்னுடையதாகக் கொள்வான். கொள்கையற்ற இத்தகைய மனிதரைப் பற்றி நமது மலாய் நாட்டுத் தனித்தமிழ்ச் சோதரர் பொருட்படுத்தாது அறம் வளர்க்க வேண்டுகிறேன்

குறிப்பு:—

'இந்து' எனத் தன்னை விளம்பரப் படுத்தி மக்களை வாதிற்கழைக்கும் ஒருவரின் நோட்டீஸ் மலாய் நண்பர்களால் நமக்குச் சில வேண்டுகோளுடன் அனுப்பப்பட்டது. மேற்கண்டவை நண்பர்களுக்கு நமது பதிலாகும் பத்திராதிபர் "நாடார்குலமித்திரன்"

சாரதா மசோதா அமுலுக்குவந்துவிட்டது

அதாவது ஏப்ரல் மாதத்திற்கு மேல் சிறு குழந்தைகளுக்கு கல்யாணம் செய்தால் தண்டனையாகிவிடும் என்கின்ற தீர்மானத்தின் மேல் இப்போதே சிறு குழந்தைகளுக்கு தினம் தினம் ஆயிரக்கணக்காய் கல்யாணங்கள் நடக்கின்றன. இவைகளுள் இரண்டரை வயது பெண்குழந்தைக்கும் 25வயது ஆணுக்கும் நடக்கும் கலியாணமும் ஒன்று.

ராமநாதபுரம் தேவஸ்தானக் கமிட்டி

திருவாளர்கள் ராவ் சாஹிப் ராஜம் நாயுடுகாரு, சிவகங்கை எஸ் ராமச்சந்திர சேர்வை, சாத்தூர் டி. எஸ். கந்தசாமி முதலியார், காரைக்குடி எஸ்.முருகப்பா, அருப்புக்கோட்டை கோபாலகிருஷ்ணசாமி நாயக்கர், சிவசாமிநாத பிள்ளை முதலிய கனவான்கள் ராமநாதபுரம் தேவஸ்தானக்கமிட்டிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

குமரன் டைரி.

(பிரமோதூத வருடம்)

விலை ரூபா ஒன்று

மானேஜர்,
தனவைசியன் கம்பெனி லிமிடெட்,
காரைக்குடி, (இராமநாதபுரம் ஜில்லா)

இனாம்! முற்றிலும் இனாம்!!

காசியில் மூன்று நாள் என்ற ஓர் இனிமையான புத்தகம்

வெளிவந்துவிட்டது

உடனே ஒரு அணா தபால் ஸ்டாம்புடன் தங்கள் முழு விலாசங்களை தெளிவாய் எழுதி அனுப்புங்கள். அடுத்த தபாலில் மேற்படி புத்தகம் தங்களுக்கு இனாமாக வந்து சேரும்.

கே. எஸ். முத்தையா அண்டு சன்ஸ்,
சில்க் ஹவுஸ், மதுரை,

"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதா பேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"

குடி அரசு

ஈரோடு 1930 மார்ச்சு மீ 2-உ

ஸ்தல ஸ்தாபன மசோதா.

சென்னை சட்டசபையில் ஸ்தல ஸ்தாபன மசோதா ஒன்று ஸ்தல ஸ்தாபன மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களால் கொண்டுவரப்பட்டதானது இவ்வாரம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. அநேகமாக மேன்மைதங்கிய கவர்னர் அவர்கள் சம்மதமும் கவர்னர் ஜனரல் அவர்கள் சம்மதமும் பெற்று இவ்வருஷத்திலேயே அமுலுக்கு வந்துவிடும் எனவே நினைக்கிறோம்.

இந்த சட்டம் செய்யப்பட்டதின் மூலம் சில நன்மைகள் ஏற்படக்கூடும் என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகின்றோமாயினும் பலன் கொடுக்கும் முக்கியமான நன்மைகள் எதுவும் பிரமாதமாய் ஏற்பட்டுவிடும் என்பதாக நம்மால் நினைக்க முடியவில்லை.

ஸ்தல சுயாட்சி போன்ற ஸ்தாபனங்களில் ஏதாவது சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமானால் அச்சீர்திருத்தங்கள் மிகுதியும் அந்த ஸ்தாபனங்களின் நல்ல ஆட்சிக்கும் நாணயத்திற்கும் வரிப்பொருளை சரியானபடி செலவழிப்பதற்கும் உபயோகப்படக்கூடியதாய் இருக்கவேண்டும். இப்போது நமது நாட்டில் உள்ள ஸ்தல ஸ்தாபனங்களுக்கு இந்த மூன்று குணங்களையும் காப்பாற்றும்படியான சக்தி இல்லை என்று பல தடவை அழுத்திச்சொல்லுவோம். அதுவும் 1920ம் வருஷம் ஏற்பட்ட ஸ்தல ஸ்தாபன சட்டத்திற்கு பிறகு ஏதோ கொஞ்சம் கஞ்சம் இருந்த நல்லரசாட்சியும் நாணயமும் அடியோடுபோய்விட்டது. பண விஷயம் 100க்கு 10 ஸ்தாபனங்களில் ஸ்தாபனத் தலைவர்கள் கையாடல் செய்வதில்லை என்று சொல்லாமே தவிர மற்றபடி 100க்கு 90 ஸ்தாபனங்கள் ஸ்தாபன தலைவர்களால் நேரிலும் நண்பர்கள் சுற்றத்தார்கள் மூலமும் கைபாடல் லஞ்சம் கன்ட்ராக்ட்டு முதலாகியவைகளின் மூலம் ஸ்தல ஸ்தாபன பொருள்கள் பாழாக்கப்பட்டுவருகின்றது. மேல் கண்ட குணங்கள் இல்லாத சில ஸ்தல ஸ்தாபனத்திலும் கூட தாங்களோ தங்களது பந்துமித்திரர்களோ அடையாவிட்டாலும் தாங்கள் அந்த ஸ்தாபனத்தில் இருந்து நடத்தும் ஆட்சிக்கு முட்டுக்கட்டை ஏற்படாமலிருப்பதற்கு தாங்களே அடுத்த தட்வையும் அந்த ஸ்தாபனத்தில் நிலைத்திருப்பதற்கும் மற்ற மெம்பர்கள் இஷ்டப்படி நடக்க வேண்டிய நிர்பந்தங்களிலிருந்து தப்பமுடியாததின் காரணமாய் மேல் கண்ட மூன்று குணங்களால் அந்த ஸ்தாபனங்களுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டத்திற்கு குறையாத பலனை உண்டாக்கிவிட வேண்டியவர்களாகி விடுகிறார்கள். மற்றும் அநேக யோக்கியர்கள் கூட நிர்வாகத்தில் செரிப்படுத்திக் கொள்ளலாம் என்கின்ற எண்ணத்தின் பேரிலேயே தேர்தல்களில் கண்மூடித்தனமாய் பணம் செலவு செய்து விட்டு பிறகு அதைச்சரிப்படுத்த முயர்ச்சிப்பதில் ஸ்தாபனங்களின் நல்ல ஆட்சிக்கும் பொருளாதாரத்திற்கும் கேடு உண்டாகும்படியான மாதிரியில் நடந்துதீரவேண்டியவர்களாகி விடுகிறார்கள். இத்தியாதி குணங்கள் இந்த புது சட்டத்தால் அடியோடு மறைந்துவிட்டது என்று சொல்லுவதற்கு இல்லை. ஆனால் இரண்டொரு காரியங்களில் நன்மை ஏற்பட்டிருப்பதற்கு அதை பொருத்தவரையாவது பாராட்டாமலிருக்க முடியவில்லை. அதாவது தேர்தல் விஷயங்களில் சிறிது தொல்லைகள் குறைந்திருக்கின்றது. முனிசிபாலிட்டிகளில் அந்தந்த வருஷத்திய வரியை செலுத்தியவர்களுக்குத்தான் ஓட்டுரிமை உண்டு என்கின்ற நியதி முன் இருந்ததின் காரணமாக சேர்மென்கள் பொதுஜனங்களிடம் வரி வசூலாக்காமலே இருந்தும் தங்களுக்கு வேண்டிய சில ஆள்கள் இடமமாத்திரம் வசூலித்துக்கொண்டும் தாங்களாகவே தொழில் வரி என்று 10 அணா வீதம் 40, 50 மூன்றுதரம் ஆள்களுக்குகட்டி அவர்களை ஓட்டர்களாக்கி வைத்துக்கொள்ளுவதுமான முறையில் ஓட்டர் லீஸ்ட்டு தயாரித்து வைத்துக்கொண்டு தாங்களும் தங்களது நண்பர்களும் அடிமைகளுமே முனிசிபாலிட்டியை பிதுரார்ஜித சொத்தாக அனுபவித்து வந்த வழக்கம் இனி தடைபடும் மாதிரியில் சிறிது மாற்றமடைந்திருக்கின்றது. அதாவது பணம் கட்டினாலும் கட்டாவிட்டாலும் வரி செலுத்தும ஜாப்தாவில் பெயர் இருந்தால் போதும் என்கின்ற அளவில் ஓட்டர்களின் யோக்கியதாபக்ஷம் முன்னேற்றமடைந்திருக்கின்றது. இரண்டாவதாக தேர்தல்கள் அதாவது எலக்ஷன்களில் நடந்துவரும் அக்கிரமங்கள் ஒருவாறு மாற்றமடைந்திருப்பதாகவும் தெரிகின்றது. இப்போது இருக்கும் ஸ்தல ஸ்தாபனத்தலைவர்களிலும் அபேக்ஷகர்களிலும் நூத்துக்கு 10பேர் கூட இந்த தேர்தல் விஷயத்தில் நாணயமாய் நடந்துகொண்டு வருகிறார்கள் என்று சொல்ல முடியாத நிலையிலேயே தேர்தல்கள் நடந்து வருகின்றது. உதாரணமாக நூத்துக்கு 50 தேர்தல்கள் கோர்ட்டுக்கும் 100க்கு 75 தேர்தல்கள் கவர்மெண்டுக்கும் போய் விவகாரங்களும் தகராருகளும் செய்தவண்ணமாகவே இருந்து வருகின்றன.

நமக்கு நம்பிக்கை உண்டாகும் மாதிரியில் சில ஸ்தல ஸ்தாபன தலைவர்கள் நாமினேஷன (ஸ்லிப்) சீட்டை கிழித்துவிட்டு 'வரவில்லை' என்று சொன்னவர்களும் போர்ஜரியாய் வித்ட்ரா கடிதம் எழுதிக்கொண்டவர்களும் 'சட்டபடிக்கு இல்லாததால் ஸ்லிப் செல்லாது' என்று நிராகரித்துவிட்டவர்களும் தேர்தல் விஷயம் யாருக்கும் தெரியப்படுத்தாமல் இரகசியமாய் செய்துகொண்டவர்களும ஓட்டு பெட்டியைத்திறந்து திருத்தியவர்களும் போலிஸ் ஆபீசர் மூலம் தப்பாய் மார்க்கு செய்யசெய்தவர்களும் நல்ல ஓட்டுகளை செல்லுபடி அற்றதென்று தள்ளி கணக்கு பார்த்தவர்களும் எலக்ஷன் தேதியில் நடத்தாமல் செய்தவர்களும் ஓட்டுப்பெட்டியில் இங்கியை ஊற்றச்செய்து ஓட்டுகளை தள்ளி குறைத்து எண்ணியவர்களும் ஓட்டுப் பெட்டியில் பாஸ்பரஸ் என்னும் நெருப்பு திராவகம் ஊத்தினவர்களும் மற்ற அபேக்ஷகரின் ஓட்டுகளை பதிவு செய்யாமல் நேரமாய் விட்டது என்று சொல்லி ஆபீசை மூடி விட்டவர்களும் ஓட்டுச் சீட்டுகளை பெட்டிக்குள் போடாமல் பக்கத்தில் ஆள்கள் இருந்து வாங்கி தங்கள் இஷ்டப்பட்டபடி செய்தவர்களும் பணம் கொடுத்தும் மிரட்டியும் நேரில் இருந்து கொண்டு ஓட்டு போட அனுமதித்தவர்களும் மற்றும் இம்மாதிரி அநேக காரியங்கள் எலக்ஷனில் தலைவரால் நடந்தது நன்றாய் தெரியும் மற்றும் போலீசார் இல்லாமல் எலக்ஷன் நடத்த முடியாததும் ஆன காரியங்கள் மூதல் இம்மாதிரியான காரியங்கள் சற்று தடைப்படும்படியாக புதிய சட்டத்தில் எலக்ஷன்களை சர்க்கார் அதிகாரிகள் நேரில் இருந்து நடத்தும்படியான திருத்தங்கள் ஏற்பட்டிருப்பது சந்தோஷிக்கத்தக்கதேயாகும்.

மற்றும் ஒரு விஷயம். அரை சந்தோஷத்திற்கு இடமானதையும் குறிப்பிட விரும்புகின்றோம். அதாவது வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் என்பதாகும். இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்னும் விஷயத்தில் நாம் சுமார் பத்து வருட காலமாக எடுத்து வந்த முயற்சி வாசகர்கள் அறிந்ததேயாகும். அதாவது 1919ம் வருஷம் சென்னை மாகாண சங்கம் முதல் திருச்சி திருநெல்வேலி தஞ்சை திருப்பூர் சேலம் திருவண்ணாமலை காஞ்சீபுரம் ஆகிய இடங்களில் கூட்டப்பட்ட காங்கிரஸ் மாகாண கான்பரன்ஸ்கள் வரை அவைகளில் இருந்துகொண்டும் கடைசியாக அதே காரணத்தால் காஞ்சீபுரம் கான்பரன்சில் இருந்து வெளியேறி குடி அரசு திராவிடன் பத்திரிகை மூலமும் சுயமரியாதை இயக்கத்தின் மூலமும் நாம் பார்ப்பன அடிமைகளின் எவ்வளவோ எதிர்ப்புக்கிடையில் முயற்சித்து வந்திருக்கின்றோம். அந்த முயற்சி முழுதும் கைகூடாவிட்டாலும் அரசாங்க அதிகார உத்தியோகங்களில் ஒரு அளவும் ஸ்தல ஸ்தாபனங்களில ஒரு அளவும் வெற்றி பெற முடிந்ததற்கு நாம் மகிழ்ச்சியடைந்தேயாக வேண்டும். சாதாரணமாக நாம் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்டது முக்கியமாய் கிருஸ்தவர்கள் மகமதியர்கள் இந்துக்கள் என்பவர்களில் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதவர்கள். பார்ப்பனரல்லாதவர்களில் "தீண்டத்தக்கவர்கள்" "தீண்டப்படாதவர்கள்" என்கின்ற பிரிவுப்படி இருக்க வேண்டுமென்றே முயற்சி செய்தோம். ஆனால் இவற்றுள் ஒன்று தவிர அதாவது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதவர் என்கின்ற பிரிவு தவிர மற்ற பிரிவுகளுக்கெல்லாம் பிரதிநிதித்துவம் இந்த புதிய சட்டத்தின் மூலம் ஏற்பட்டுவிட்டது. அதுமாத்திரமல்லாமல் அளவுக்கடங்கா மகிழ்ச்சி அடையுமாறு மற்றும் ஒரு புதிய பிரிவாருக்கும் ஏற்படுத்தப்பட்டாய் விட்டது. அதாவது ஸ்தலஸ்தாபனங்களில் பெண்களுக்கும் தனிப் பிரதிநிதித்துவம் என்பது. ஆனாலும் பார்ப்பன பார்ப்பனரல்லாத பிரிவு இல்லாமல் போய் விட்டதற்கு காரணம் என்னவென்றால் அது தப்பான கொள்கையென்றோ அல்லது தேச நன்மைக்கு விரோதமென்றோ இல்லாமல் இப்போது நாடு இருக்

கும் நிலைமையில் அதாவது சுயமரியாதை இயக்கம் வேலை செய்ததின் பலனாய் அநேக ஸ்தல ஸ்தாபனங்களிலும் பார்ப்பனர்களின் ஆதிக்கம் அடியோடு ஒழிந்து விட்டபடியால் அவர்களால் இனி பயமில்லை என்கின்ற நம்பிக்கையின் பேரில அந்த விஷயத்தை பார்ப்பனரல்லாத சில பிரமுகர்களே நழுவ விட்டுவிட்டதால் அப்பிரிவு நிறுத்தப்பட்டு விட்டது. நிற்க இப்போதுஇந்த சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற வகுப்புவாரி பிரதிநிதித்துவ விஷயத்திலும் நாம் தேர்தலுக்கு தனித்தொகுதியே வேண்டுமென்றும் கேட்டு வந்தோம். ஆனால் புதியசட்டத்தில் தனித்தொகுதிக்குப் பதிலாக பொதுத் தொகுதியிலேயே ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டுவைத்துஇருக்கின்றது. இது முதல்படியாகவும் பரீட்சார்த்தமாய் பார்ப்பதாகவும் என்று சொல்லி ஏற்பாடு செய்திருப்பதால்இதன் மூலம தக்கபிரதிநிதித்துவம் கிடைக்காதபட்சம் தனித்தொகுதியே ஏற்பாடு செய்வதாகக் கருதி இருப்பது மெத்த அனுகூலமானதேயாகும்.

ஆகிய இந்தநன்மைகள் ஒருபுறமிருந்தாலும் ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் நல்லஆட்சியாக சீர்படவேண்டியதுறையில் ஒருசிறுமாறுதலும் ஏற்பட்டிருப்பதாய் தெரியவராததற்கு வருந்தாமலிருக்கமுடியவில்லை. இப்போதைய தலைவர்களின் ஆட்சி நூற்றுக்கு ஐந்து பேருடையது கூட ஒழுங்கானதென்று சொல்ல முடியாதென்பதே நமது கருத்து. எவ்வளவு நாணயமுள்ளவரும் நடுநிலைமையுள்ளவருமான தலைவர்களாயிருந்தாலும இப்போதுள்ள நிலைமையில் சிறிதும் அந்த ஸ்தலஸ்தாபனங்களின் நன்மையைக் கோரி ஒழுங்காய் நடந்து கொள்ள முடியாத நிலையிலேயே இருந்துவருகின்றார்கள். மெம்பர்களுடையதாட்சண்யங்களும் ஓட்டர்களுடைய தாட்சண்யங்களும் தலைவர்களின கைகளைக் கட்டிப்போட்டு விடுகின்றன. அனேகமாய் ஸ்தாபனங்களின் உத்தியோகங்கள்முழுவதும் மெம்பர்களின்சிபார்சுப்படியே வினியோகிக்க வேண்டியதாய் இருக்கின்றது. அவர்களுடைய ஒழுக்கவீனமானதும் நாணயக் கேடானதுமான காரியங்களைப்பற்றி கவனிப்பது என்பது ஸ்தாபனத் தலைவர்களுக்கு சிறிதும் முடியாத காரியமாயிருக்கிறது. கண்ட்ராக்ட் விஷயங்களோ பெரும்பாலும் மெம்பர்களுக்கே வேறு பெயரின் பேரால் கொடுத்துத் தீர வேண்டியதாகும். அந்த வேலை ஊழல்களை எந்த உத்தியோகஸ்தனும் கவனிக்கக்முடியாது. கவனித்தாலோ மெம்பர்களால் தலைவர்களிடம் சொல்லப்பட்டு தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டு விடும் இதுவே தமிழ் நாட்டில் மிகவும் நாணயமாய் உள்ள தலைவர்களின் நிலை. மற்றபடி அந்த தலைவர்கள் என்பவர்கள் நாணயத்திலும் யோக்கியப் பொருப்பிலும் கவலையில்லாமலும் இதைக் கொண்டே ஜீவனம் பண்ண வேண்டியவர்களுமாய் இருந்துவிட்டாலோ அதன் நிலையைப் பற்றி கேட்க வேண்டுமா? உதாரணமாக ஈரோடு முனிசிபாலிட்டியை எடுத்துக் கொண்டால் அந்த முனிசிபாலிட்டி ஒரு 3 வருஷத்திற்கு முன்னால்இருந்த தலைவரின நடத்தையில் அதன் பொருளாதார விஷயம் இன்னும் 10 வருஷங்களுக்கு தலையெடுக்க முடியாத நிலையில் இருக்கின்றதை இன்றும்பார்க்கலாம். எவ்வளவோ திருட்டுகளும் புரட்டுகளும் கைப்பிடியாய் பிடித்துக் கொடுத்தும் முனிசிபல் சட்டமும் இந்தியன் பினல் கோடும் அவரை ஒன்றும செய்யமுடியவில்லை. குதிரை திருட்டுப்போனதிற்கப்புறம் லாயத்தைப பூட்டினதைபபோல் இப்போது மிக்க நாணயமாயும் யோக்கியப்பொறுப்பாயும் இருக்கும்தலைவர்களை சர்க்காரார் மிரட்டுவதைத் தவிர வேறு ஒருகாரியமும் செய்ய முடிய வில்லை.

ஈரோடே (அதாவது சர்க்காருக்கும் மந்திரிகளுக்கும் சுலபத்தில் உண்மை தெரியக்கூடியதும் தங்கள் கட்சிக்காரணமாக மந்திரிகள் பாரபட்சம் காட்ட வேண்டிய அவசியமில்லாததுமான ஈரோடே) இப்படி இருந்தால் மற்ற ஊர்களின் நிலைமையை நாம்சொல்லிக்காட்ட வேண்டுமா? எனவே இந்த நிலை மாறுவதற்கு நாம் ஒவ்வொரு ஸ்தாபனங்களுக்கும் ஒரு நிர்வாக அதிகாரியை நியமிக்கவேண்டும் என்று யோசனை கூறி இருந்தோம். ஆனால் இந்த யோசனை சட்ட சபையில் பரிகசித்து காற்றில் பரக்க விடப்பட்டது.

ஏனெனில் அந்த சட்ட சபையானது பெரிதும் ஸ்தலஸ்தாபன தலைவர்கள், ஸ்தலஸ்தாபனத்தில் செல்வாக்குள்ள அங்கத்தினர்கள் ஆகியவர்கள் ஆதிக்கத்தையே கொண்டதாயிருப்பதால் அவர்கள் தங்களின் நன்மையையோ அதிகாரத்தையோ செல்வாக்கையோ விட்டுக் கொடுக்கமுடியாத நிலையும் விட்டுக் கொடுத்தால அவர்கள் மறுபடியும் ஸ்தலஸ்தாபனத் தலைமையையும் - ஏன்? சட்ட சபை ஸ்தாபனத்தையும் இழந்துவிட வேண்டியவர்களாய் விடுவார்களானதால் அந்த யோசனையை கனம் மந்திரி ஆதரித்தும் அங்கத்தினர்களால் அவ்வளவு அலட்சியப் படுத்தப்பட்டு விட்டது. ஆனாலும் மறுபடியும் ஒரு சமயம் இந்த சட்டம் திருத்தவரும் சமயத்தில் இந்தயோசனை இப்போதையைப்போல் அவ்வளவு அலட்சியப் படுத்தப்படாமல சிறிது மாறுதலுடனாவது அனுமதிக்கப்படும் என்கின்ற தைரியம் நமக்கு இருப்பதால் இப்பொழுது இவ்வளவுடன் நிறுத்தி இந்த சட்டத்திற்காக முயற்சி எடுத்து விடாப்பிடியாய் உழைத்து நிறைவேற்றின கனம் முதல் மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கு நமது பாராட்டுதலும் ஏழை வரி செலுத்துவோரின் நன்றியறிதலும் உரியதாகுக.

"ஸ்ரீமுகம்"

சிங்கேரி மடாதிபதி உயர் திரு "ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள்" அவர்களிடமிருந்து நமக்கு வந்த "ஸ்ரீமுக;' அழைப்பை இவ் விதழில் வேறு ஒரு பக்கத்தில் பிரசுரித்திருக்கின்றோம். திரு. மடாதிபதி அவர்கள் அந்த "ஸ்ரீமுகம்" நமக்கு அனுப்பியதற்காகவும் மற்றும் அதில் நம்முடையவும் நமது மனைவியாருடையவும் ஒரு சிறு தொண்டை மிகுதியும் பாராட்டி தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்திருப்பதற்காகவும் நாம் நம சார்பாகவும் நமது மனைவியாரின் சார்பாகவும் நமது மனப் பூர்த்தியான நன்றி யறிதலை தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றோம். நிற்க அந்த "ஸ்ரீமுக"த்தில் "சனாதன தர்மத்தை கெடுக்காமல்"; "கரும காண்டத்தில் உள்ள அவரவர்கள் கடமைகளைச் செய்து" "சாஸ்திரங்கள் இடம் கொடுக்கும் வரையில்" என்கின்ற நிபந்தனைகள் கண்டு அதற்கு விரோதமில்லாமல் "சில சுதந்திரங்கள் அளிக்கப்படும்'; என்கின்ற வாசகங்கள் காணப்படுகின்றபடியால் நாம் அங்கு செல்வதால் ஏதாவது பயன் ஏற்படுமா என்கின்றவிஷயம் நமக்குச் சந்தேகமாகவே இருக்கின்றது. ஆயினும்பொருப்புள்ளஒரு பதவியை வகிப்பவரும் பல கொள்கைகளுக்கு "அபிப்பிராய கர்த்தாவாய்" இருப்பவரும் பல மக்களால் வணங்கிக் கொண்டாடி மதிக்கத் தக்கவராக இருப்பவருமான ஒரு பெரியாரின் அழைப்பை மதித்து அதற்கு இணங்கிஅங்கு சென்று வரவேண்டியது வேண்டியது மிக்க நியாயமாகுமென்றே நமக்குத் தோன்றுகின்றது. ஆயினும் நமது நண்பர்களின் விருப்பத்தை அறிந்து சென்று வரலாமென்றே கருதியிருக்கின்றோம்.

ஈ. வெ. ராமசாமியாருக்கு முனிசிபல் உபசாரப் பத்திரம்.

கரூர் முனிசிபல் ஆபீசில் 21—2—30 தேதி கூடிய கவுன்சிலர்களின் பொது மீட்டிங்கில் சமீபத்தில் கரூருக்கு விஜயம் செய்யும் திரு. ராமசாமிப் பெரியாருக்கு அவரது பொதுநல சேவையைப் பாராட்டி ஒரு உபசாரபத்திரம் வாசித்துக் கொடுப்பதென்று தீர்மானித்து அதற்காக ஒரு கமிட்டியும் ஏகமனதாய் நியமிக்க தீர்மானிக்கப்பட்டதென்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

வேண்டுகோள்.

1930ம் வருஷம் மார்ச்சு மாதம் 10ந் தேதி யன்று நடைபெறும் இந்திய சட்டசபை தேர்தலுக்கு திரு. ஸ்ரீமான் காந்திமதிநாத பிள்ளை அவர்கள் அபேட்சகராக நிற்பது தங்களுக்குத் தெரியவரும் என்று நினைக்கிறேன். சென்ற மூன்று தடவைகளிலும் ஒரே வகுப்பினர் மேற்படி ஸ்தானத்தை வகித்து வந்திருக்கின்றனர் என்பதை நான் தங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. மேற்படி ஸ்தானம் எவ்வளவு குறுகியகாலமாகயிருப்பினும் அதை இனிமேல்ஒருவர்ணாச்சிரம தர்ம வகுப்பினருக்கு இடம் கொடுக்கப்படாதென்பது எனது நோக்கம். ஆகவே தங்களதுவோட்டை திரு. ஸ்ரீமான் காந்திமதிநாத பிள்ளை அவர்களுக்கே கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். என திரு W. P. A. சௌந்திரபாண்டியன் தெரிவிக்கிறார்.

தெப்மாப்பட்டு வைக்கம் வீரர் வாசக சாலை ஆண்டு விழா.

தெம்மாப்பெட்டு வைக்கம் வீரர் வாசகசாலை ஆண்டு விழாவானது 9—3—30 தேதி தெம்மாப்பட்டில் உயர் திருவாளர் எஸ். ராமனுதன் எம். ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் நடைபெறும்.

மேல்நாட்டு "தெய்வீக" ங்கள்

கிழவர் குமரனாக 1,40,000 ரூபாய்

ஒரு கிழட்டு கனவான் தனது கிழப்பருவத்தை வாலிபப் பருவமாக்கிக்கொள்ள ஆசைப்பட்டு ஒரு லட்சத்து நாற்பதினாயிரம் ரூபாய் கொடுத்து இரண சிகிச்சை வைத்தியத்தின் மூலம் வாலிபராகி விட்டார்.

மலேயா தேசத்திற்கும் ஜாவா தேசத்திற்கும் 700 மைல் இருக்கின்றது. இந்த தூரத்தை 7 மணியில் ஒரு ஆகாயக் கப்பல் தாண்டி விட்டது. அதாவது பாட்டா வியா என்கின்ற ஊரில் காலை 6-30 மணிக்குப் புறப்பட்டு சிலேட்டாருக்கு பகல் 1-30 மணிக்கு வந்து சேர்ந்து விட்டது. மேல்படி ஆகாயக் கப்பல் டிரைவர் இன்னும் 1-30 மணி நேரம் குறைத்து 5-30 மணி நேரத்தில் மேற்படி 700 மைல் போகலாம் என்று கூறுகிறார்.

அவசரமாக கம்பித் தந்திகள் மூலமும் கம்பியில்லாத்தந்திகள் மூலமும் சமாச்சாரங்கள் அனுப்புவது போலவே உருவப் படங்களையும் ரூபங்களையும் தந்திகள் மூலமாக ஐரோப்பா தேசத்திலும் அமெரிக்கா தேசத்திலும் தந்தி ஆபீசுகளில் கட்டணங்களுக்கு அனுப்பிக்கொண்டு வரப்படுகின்றது.

ஹிமயமலை சிகரத்தைக் கண்டு பிடிக்கவும் செவ்வாய் மண்டலத்திற்கு போகவும் புறப்பட்டு விட்டார்கள்.

நம் நாட்டு தெய்வீகங்கள்

ஆனால் நம் நாட்டு "தெய்வீகங்களோ" ஒரு கோழியை அறுத்து சமையல் செய்து பக்குவம் செய்துகொண்டு போன கோழிக்காவடியை ஆண்டவர் முன்னிலையில் இறக்கி வைத்தவுடன் கோழி உயிர் பெற்று பறந்து போயிற்று.

மணல்அள்ளிகாவடி கட்டிக்கொண்டுபோனது சக்கரை ஆகிவிட்டது.

மூன்று தடவை பரீட்சையில் தேராத ஒருவர் அனுமார் கவசம் கட்டிக்கொண்டவுடன் பரீட்சையில பாசாகி விட்டார்.

இருபது வருடமாய் ஒரு பெண்ணைப் பிடித்துக் கொண்டிருந்த பேய் நாட்டராயன் கோவிலுக்குப் போனவுடன் பரந்தோடிப்போய்விட்டது.

நாற்பது வருடமாய் குழந்தை இல்லாமலிருந்து திலக ஓமம் பண்ணி வைத்தவுடன் இரட்டைக் குழந்தை பிறந்து விட்டது.

பழந்தமிழ் நாகரிகத்திற்குப் போவதற்காக "3000" வருடத்திற்கு முன்னால் ஏற்பட்ட தொல்காப்பிய ஆராய்ச்சி செய்பத் துணிந்தாய் விட்டது.

வட ஆர்க்காடு சட்டசபை தேர்தல்.

வட ஆர்காடு ஜில்லா போர்டு பிரசிடெண்டு திரு. ராவ் பகதூர் கார்கே. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சென்னை சட்டசபை தேர்தலுக்கு நிற்கிறார் எனக்கேட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். இதுவரை பொறுப்பை உணராமல் ஏமாந்துவந்த வட ஆர்காடு ஜில்லா ஓட்டர்கள் இதுசமயமாவது தங்கள் பொறுப்பை உணர்ந்து ஜில்லாவின் கவுரவத்தை காப்பாற்றுவார்களாக.

திரு. ஈ. வெ. ராமசாமியாருக்கு

"ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரியார் ஸ்ரீமுகம்"

(முத்திரை)

"ஸ்ரீ சங்கராச்சாரி சமஸ்தானம்" நிஜசிருங்கேரி

க. நே. 53. (முகாம் புஷ்பவனம்)

"அஸ்மத் பிரிய முக்கிய சிஷ்யரான கோயமுத்தூர் ஜில்லா ஈரோடு கஸ்பா வெங்கிட்டசாமி நாயுடு குமாரர் ஸ்ரீமான் ராமசாமி நாயுடுவினுடைய சமஸ்த்த ஐஸ்வரிய ஆரோக்கிய அபிவிருத்தியின் பொருட்டு திரிகால அனுஷ்டானத்திலும் பகவத் பிரார்த்தனையுடன் ஆசீர்வதித்து எழுதிவைத்தனுப்பிய ஸ்ரீமுகம். இங்கே ஆர்காடென்னும் ஆரண்ய க்ஷேத்திரங்களில் ஒன்றாகிய புஷ்பவனம் என்னும் புதுப்பட்டி கிராமத்திய ஸ்ரீ பரத்துவாஜ மஹாரிஷி ஆசிரமத்தில் லோகத்தில் எல்லோருடைய க்ஷேமத்தைக் குறித்து தபஸ் செய்து கொண்டு இந்த மரியாதையை அனுப்பியிருக்கிறோம்.

சம்பாதி—லோககுரு ஸ்தானமாகிய இதில் பரதகண்டத்திலுள்ள சனாதன தர்மத்தை கெடுக்காமலும் எல்லோருக்கும் க்ஷேமம் உண்டாகும்படிக்கும் பாரபக்ஷம் இல்லாமல் படிக்கும் சாஸ்திர எல்லைகள் கடவாமல் படிக்கும் பிபீலகாதி பிரம்மம் பரியந்தம் (எரும்பு முதல் பிரம்மாதிகளிலும்) எல்லாவற்றிலுமிருப்பது ஒரே பிரம்மமென்று எல்லோருக்கும் பிரம்மானந்தத்தை அடையச்செய்யவே ஜெகத்குரு பீடம் இருக்கிறது. கர்மகாண்டத்தில் அவரவர்கள் நன்றாய் கடமைகளை செய்து நடந்து அதனால் சித்தமானது சுத்தமாகி அகண்ட பிரம்மானந்த சாக்ஷாத்காரம் அடையச்செய்வதே விரதமாகக் கொண்ட இந்த குருபீடமானது ஸ்ரீ ஆதிசங்கர பகவான் அவதாரம் பரம்பரைக்கிரமமாய் வந்து கொண்டும் குருவாயிருக்கும் போதே சிஷ்யர்களை ஏற்படுத்தி சன்மார்க்க சதாச்சாரத்தில் பழக்கி பீடாதிபத்யம் சன்யாசம் அளிப்பதுவழக்கமாயிருக்கிறது .....காலதேச வர்த்தமானத்தைஅனுசரித்து சாத்தியமானவரையில் சிஷ்யர்களை சன்மார்க்கத்திலும் சதாச்சாரத்திலும் நடத்திச் சந்தோஷமாயிருக்கச் செய்துகொண்டு வருகிறது. இன்னம் காலதேச வர்த்தமானத்தை யோசித்து சாஸ்திரங்கள் இடம் கொடுத்திருக்கும் வரையிலும் தற்கால நிலைமையை அனுசரித்து சிஷ்யர்களுக்கு சில சுவதந்திரங்களையும் இந்த ஜகத்குரு சமஸ்தானம் கொடுக்க வேண்டியது அவசியமாகத் தோன்றியிருக்கிறது.

நீங்கள் நெடுநாளாய்ப் பாரபக்ஷமின்றியிலும் தாக்ஷிண்யங்களுக்குட்படாமலும் ஜீவகாருண்யமுள்ளவராயும் சுவய நன்மையைக் கருதாமல் லோக நன்மையையே முக்கியமாகக் கருதி சுக துக்கங்கள் பாராமல்மானாவமானத்தைக் கவனியாமல் ஜன்மமெடுத்ததுபரோபகாரமே சாதனமென்று கருதி உங்கள் தர்மபத்தினி சமேதராய் பாடுபட்டு வருவது எங்களுக்கு மிகவும் சந்தோஷத்தை உண்டாக்கிறது. கிறது உங்களை நேரில் பார்த்து உற்சாகப்படுத்தி எங்கள் அபிப்பிராயங்களையும் உங்களுக்குச்சொல்லி தாங்க சஹாயமும் செய்து அனுக்கிரஹிக்க வேண்டுமென்று குரு தேவதாபிரேரணை உண்டாயிருப்பதால் விவேகியாகிய நீரும் உங்கள் தர்மபத்தினியும் அனுதியாய் உங்களுக்குச் சொந்த பாத்தியமான இந்த ஜகத்குரு பீடத்தை சிறப்புவிப்பதற்காக இந்த சமஸ்தானத்திற்கு வந்து ஸ்ரீ சாரதா சந்திரமௌளீஸ்வரர்கள் பிரசாத அனுக்கிரகம் பெற்று இப்போதிலும் அதிகமான சிரேயசை அடைவீர்கள் என்று நம்பி இந்த ஸ்ரீமுகம் எழுதிவைத்து அனுப்பலாயிற்று. விவேகளுக்கு என்ன எழுத வேண்டியிருக்கிறது."

ஸ்ரீ பிரஸ்தாவித்தியானந்தநாத பாரதஸ்வாமி சங்கராச்சாரியூ.

பு. அ. வேங்கடரமணாம் சர்வாதிகாரி. (என்று கன்னடத்தில்)

தேவாங்க பாரிஸ்டர்.

இங்கிலாந்துசென்ற சேலம்திரு S. C. வெங்கிட்டய செட்டியார் குமாரர் திரு. S. V. ராமசாமி பாரிஸ்டர் பரீட்சை பாஸ் செய்துவிட்டு வந்து சேர்ந்தார்.

ஆதிதிராவிட சங்க தீர்மானங்கள்.

சமீபத்தில் சென்னை அரசாங்க நிர்வாக சபையில் காலியாகும் ஒரு மெம்பர் ஸ்தானத்தை ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த உயர் திருவாளர் எம். சி. ராஜா அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்றும்,

சிதம்பரம் சுவாமி சகஜாநந்தம் என்பவர் சென்னை திரு. பி. வரதராஜுலு நாயுடு என்பவருடன் சேர்ந்துகொண்டு மதப் பிரசாரத்தின் மூலம் ஆதிதிராவிட சமூக முன்னேற்றத்திற்கு இடையூறு செய்து வருவதாக கண்டித்தும் ஆதிதிராவிட சங்கங்களிலிருந்தும் மீட்டிங்குகளிலிருந்தும பல தீர்மானங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

ஈரோட்டில மாகாண சுயமரியாதை மகாநாடு

ஏப்ரல் மாதத்தில் நடைபெறும் 4, 5-நாளகள் தொடர்ந்து நடக்கும். விவசாயகண் காட்சியும், வியாபார கண்காட்சியும், கைத்தொழில் யந்திரக் கண் காட்சியும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்றும் பல மகாநாடுகளும் நடக்கும். வியாபார சம்மந்தமாக இடம் வேண்டியவர்கள் முதலிலேயே தெரிவித்து இடம் சேகரித்து வைத்துக் கொள்ளுவது நலம்.

ஜில்லா போர்டுக்கு பெண்கள் நியமணம்.

ராமநாதபுரம் ஜில்லா போர்டுக்கு திருமதி பாருதட்டி அம்மாளும், மதுரை ஜில்லா போர்டுக்கு பார்வதி அம்மாளும் மெம்பர்களாய்நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் கோயமுத்தூர் ஜில்லாவுக்கு ஒருபாராயி கிடைக்காதது வருந்தத்தக்கது.

தென் இந்திய ரயில்வே வேலை நிறுத்தவழக்கு.

சென்னை ஐக்கோர்ட்டில் ஒரு வாரமாக கீழ்கோர்ட்டு தீர்ப்பின் மேல் விவாதம் நடந்துவருகின்றது. இதுவரை நடந்த விஷயங்கள் தொழிலாளிகள் இவ்வித தண்டனைக் குறிய குற்றங்கள் செய்யவில்லை என்று ஜட்ஜிகளுக்கு நன்றாய் விளக்கப்பட்டிருக்கின்றதாய் தெரிகின்றது. விடுதலையாகவேண்டியது நியாயம்என்று எதிர் பார்க்கின்றோம்.

சித்திர புத்திரன்.

இரண்டு வைத்தியர்கள்.

பார்ப்பன ஆயுர்வேத வைத்தியருக்கும் பார்ப்பனரல்லாத சித்தவைத்தியருக்கும் சம்பாஷணை.

ஆ. வே. வை. ஓய் சித்தவைத்தியரே. இந்த சட்டசபைக்குள் திரு. மூத்துலட்சுமி அம்மாள் போன பின்பு மேது வைத்தியத் தொழில்களுக்கெல்லாம் ஆபத்து வந்து விட்டது போல் இருக்கின்றதே இதைப்பற்றி கேள்வி கேப்பாடு இல்லையா!

சி. வை. என்ன ஆபத்து.

ஆ. வே. வை. என்ன ஆபத்தா. இவ்வளவுதான் சித்த வைத்தியத்தின் புத்தி.

சி. வை. சரி. ஆயுர்வேத வைத்தியர்களே மக புத்திசாலிகளாய் இருக்கட்டும். அந்த அம்மாளால் என்ன ஆபத்து வந்து விட்டது?

ஆ. வே. வை. பொட்டுக்கட்டக் கூடாதாம். தேவதாசிகள் கூடாதாம் இந்த இரண்டும் நின்று போய் விட்டால் நமது ஜீவனம் எப்படித்தான் நடக்கும்.

சி. வை. அடேயப்பா இதுதானா பெரிய ஆபத்து. இதற்கும் நமக்கும் என்னய்யா சம்மந்தம். தாசிகள் இல்லாவிட்டால் கோவில் அர்ச்சகப் பார்ப்பனர்களுக்குத்தான் ஜீவனம் கெட்டுப்போகும். ஏனென்றால் கோவிலுக்கு தாசிகள் வராவிட்டால் ஜனங்கள் கோவிலுக்குப் போக மாட்டார்கள். அதனால் அவர்களுக்கு பூசை பண்ணுவதிலும் வரும்படி குறையும். தாசிலும் வரும்படி குறையும். அப்படிக் குறைந்தாலும் சிலருக்குத்தான் குறையும். நல்ல அழகான பெண்டாட்டியோ அக்கா தங்கையே இருக்கிற பூசாரிகளுக்கு வரும்படி ரெட்டிக்குமே தவிர குறையாது. ஆகவே இதனால் நமக்கு என்ன ஆபத்து?

ஆ. வே. வை. சித்தவைத்தியரே உமக்குக் கண்டதுகண்டபடி உளரத்தான் தெரியும். உள்ளுக்குள் இருக்கும் தத்துவம் இன்னதென்று தெரியாது.

சி. வை. ஆயுர்வேத வைத்தியருக்கே உள் தத்துவம் தெரியட்டும் நமக்குத் தெரியவேண்டாம் சங்கதி என்ன சற்று சொல்லும் பார்ப்போம்.

ஆ. வே. வை. சங்கதி என்னவென்றால் குருக்கள் அர்சகர்கள் பூசாரி இவர்கள் சங்கதி எப்படியோ நாசமாய்ப் போகட்டும் தாசி இல்லாததினால் அவர்கள் வரும்படியோ தரகோ நின்று போகாது என்பது உண்மைதான். அன்றியும் எப்படியும் ஏதாவது சரிபண்ணி அதாவது சாமியை கீழே தள்ளியோ அல்லது ஆட்டிப் புரட்டியோ அஷ்டபந்தன கும்பாவிஷேகம்பண்ணச்செய்து வயிரை வளர்த்திக்கொள்வார்கள். இல்லாவிட்டால் விக்கிரகம் செய்பனை கைக்குள் போட்டு இரண்டு விக்கிரகங்களை வாங்கிக் கொண்டு போய் எங்கேயாவது ஒரு காட்டில் புதைத்து விட்டு வந்து சுவாமி கனவில் வந்து சொன்னதாக ஏதாவது பணக்கார முட்டாளிடமாவது அல்லது ஒரு பார்ப்பன தலைவனிடமாவது சொல்லி ஆர்பாட்டம் செய்து ஜனங்களை கூட்டிக்கொண்டு போய் காட்டி புதிதாய் எடுப்பதுபோல் தோண்டி எடுத்து அதற்கு கோவில் கும்பாவிசேகம் உர்சவம் செய்து ரம்பவும் சக்தி இருக்கிறதாகக் காட்டி பிழைத்துக் கொள்வார்கள். அவர்களைப்பற்றி நமக்குக் கவலை இல்லை.

சி. வை. அப்படியானால் பின்னை நமக்கு என்ன ஆபத்து வந்து விடும்?

ஆ. வே. வை. சொல்லவும் வெட்கமாய இருக்கின்றது.

சி. வை. என்னதான சொல்லுமே பார்ப்போம் நமக்கு நாமே பேசிக் கொள்வதில் வெட்கம் என்ன?

ஆ. வே. வை. நோய் இல்லாவிட்டால் வைத்தியன் எப்படி பிழைப்பான். இதை தெரிந்துகொள்ளுகிறீரா இல்லையா?

சி. வை. ஆம் உண்மைதான்.

ஆ. வே. வை. தாசிகள் இல்லாவிட்டால் நமக்கு பணம் கிடைக்கும்படியான நோய் எப்படி பரவும்?

சி. வை. அடேயப்பா இதுதானா பெரிய சங்கதி. வருகிறநோய் எப்படியும் வந்து விடும். அதெல்லாம் கடவுள் செயல்.

ஆ. வே. வை. உன் கடவுள் தலையில் நெருப்பை வாரிக்கொட்டு வேறு நோய்களுக்கெல்லாம் இங்கிலீஷ் வைத்தியம் ஆய்விட்டது. இந்த மேக சம்மந்தமான அதுவும் இரகசியமான இடங்களில் வருகின்ற நோய்களுக்குத்தான் இப்போது ஜனங்கள் டாக்டர்களைக் கூப்பிடவும் அவர்களுக்குக் காட்டவும் வெட்கப்பட்டுக்கொண்டு நம்மை கூப்பிட்டு காட்டுகிறார்கள். இனி தாசிகள் இல்லாவிட்டால் மேகவியாதி எப்படி அதிகமாக உண்டாகும். ஒரு சமயம் உண்டானாலும் அது எப்படி பரவும்?

சி. வை. தாசிகள் இல்லாவிட்டால் மனிதர்கள் எல்லாம் பரிசுத்தவான்களாகி விடுவார்களாக்கும். அப்பவும போகிறவன் எப்படியாவது போய்த்தான் தீருவான்.

ஆ. வே. வை. எப்படி போய்த்தீருவான் மற்றொருவன் சம்சாரத்தினிடம் போனால் அவன் உதைப்பான். திருட்டுத்தனமாகத்தான் போகவேண்டும் அதுசாதாரணமாய்தாசிகளிடம்நடக்கும் மாதிரிக்கு நூற்றில் ஐந்து பங்கு கூட நடக்காது. அதிலும் இந்த மாதிரி நடவடிக்கைகளால் வியாதி அதிகமாய் உண்டாய்விடாது. அவர்கள் அவசரமும் பயமும் வியாதி உண்டாவதற்கு நேரமே இருக்காது. ஆதலால் இதனால் நமக்கு பெரிய நஷ்டம் தான்.

சி. வை. தாசிகள் எடுபட்டுப்போனாலும் குச்சுக்காரிகள் என்னும் பேரால் எத்தனையோ பேர்கள் இருப்பார்களே ஒழிய அடியோடு விவசாரத்தனம் இல்லாமல் போய் விடுமென்று பயப்படவேண்டாம்.

ஆ. வே. வை. குச்சுக்காரிகள் இருப்பார்கள் என்றே வைத்துக் கொள்வோம், அந்த இடங்களுக்கு 4-நெம்பர் 5 நெம்பர் பேர்வழிகள் தான் போவார்கள். அவர்கள் காசு கொடுக்கவும் சக்தியற்றவர்கள். அவர்களால் வியாதி பரவுவதற்கும் இடமிருக்காது. பெரிய மனிதர்கள்பணக்காரர்கள், உத்தியோகஸ்தான் மரியாதைக்காரன் என்பவர்கள்போன்ற இந்த மாதிரியான ஆளுகள் கண்டிப்பாக அந்த மாதிரி இடங்களுக்குப்போகமாட்டார்கள். ஏன் என்றால் கண்டவர்கள் கேவலமாய் மதிப்பார்கள். தாசி வீடானால் தாராளமாயப் போவார்கள் பார்க்கின்றவர்களும் மதிப்பார்கள் அன்றியும் இப்படிப்பட்டவர்கள் போனால்தான் இவர்களுக்கும் சுலபமாய் நோய் வரும் அதை தங்கள் வீட்டில் உள்ள பெண்களுக்குப் பரப்பவும் சௌகரியமாகும். இந்த இரண்டு பேராலும் நம் இஷ்டப்படி பணம் வரும். தவிரவும் இந்த குச்சுக்காரிகள் வியாபாரத்திற்கும்கூட ஆபத்து வந்து விட்ட சங்கதி உனக்குத் தெரியாதா?

சி. வை. அதென்ன சங்கதி.

ஆ. வெ. வை. நீ எந்த உலகத்தில் இருக்கிறாய் என்று எனக்குத் தெரியவில்லை. விவசாரிகள் தடுப்பு மசோதா என்று ஒன்று இப்போது சட்ட சபையில் பாசாகி இருக்கின்றது. உனக்குத் தெரியாதா? அதனால் அதுவும் குறைந்து தான் போகும். அதுவும் தவிர குச்சுக்காரர்கள் லைசென்சு வாங்கவேண்டுமாம் நோயில்லையென்று டாக்டர் சர்ட்டிபிகேட் கொடுக்கவேண்டுமாம் இவ்வளவும் தப்பியல்லவா நமது வயிற்றுப் பிழைப்பை நடத்தவேண்டி இருக்கின்றது.

சி. வை. அப்படியா சங்கதி. ஆனால் ரொம்பவும் நல்ல காரியமாச்சுது. ஒருவருக்கொருவர் இஷ்டப்பட்டு திருட்டுத்தனமாய்ப் போகிறவர்கள் எப்படியோ நடந்துகொள்ளட்டும். பணம் காசு கொடுத்து போவது என்கின்ற விவசார வியாபாரம் ஒழிந்தால் போதும். நாம் நமக்கு வரும்படி இல்லாவிட்டாலும் வேறு வேலை பார்த்துக்கொள்ளுவோம்.

ஆ. வே. வை. அந்தத்தர்மஞானமெல்லாம் வாயில் பேசிவிடலாம். உங்களுக்குஇப்பொழுது சற்றுநல்லகாலம். இந்த மந்திரிகள்காலத்தில் எப்படியும்வேலை கிடைத்துவிடும். இல்லாவிட்டால மண் வெட்டி யெடுத்து மண் சுமந்தாலும் பிழைத்துக் கொள்வீர்கள். எங்கள் கூட்டத்திற்கு இந்தமாதிரி பிழைப்பைத் தவிர வேறு பிழைப்பு என்ன இருக்கின்றது. சொல்லும் பார்ப்போம்.

சி. வை. அதற்கு என்ன செய்யலாம். நீங்களும் மண்வெட்டி எடுக்கவேண்டியதுதான். எத்தனை காலத்திற்குத்தான் மக்களை ஏமாற்றி துன்புறுத்தி வாழ முடியும்? தாசியும் வேசியும் ஒழிந்தால்தானா நமதுபிழைப்பு போயிற்றென்று சொல்லுகின்றீர். அதற்கு முன்னாலேயே போய்விட்டது.

ஆ. வே. வை. அதற்கு முன்னாலேயே எப்படிப் போய்விட்டது. என்கின்றீர்

சி. வை. யூனியன் பஞ்சாயத்து தாலூக்கா ஜில்லா போடு முனிசிபாலிட்டி சட்ட சபை முதலான ஸ்தானங்களுக்கு எலக்ஷன் வந்ததொன்று. அதிலும் ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டதிலிருந்து இந்த ஸ்தானங்களில் பார்ப்பனரல்லாதாரும் இருக்க இடம் கிடைத்து எலக்ஷன் கிராமங்களுக்குப் போக ஆரம்பமானவுடன் பணக்காரர் வீட்டும் பிள்ளைகள் யெல்லாம் தாசி வேசி நாடகம் சதுர் ஆடு கோழி சண்டை கச்சேரி ஆகிய வேலைகளில் இருந்த மோகத்தை எலக்ஷன்களில் திருப்பி விட்டார்கள். முன் சொனன காரியங்களுக்கு செலவழித்த பணங்களை எல்லாம் எலக்ஷன்களில் செலவு செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். ஆதலால் தாசிகள் இருந்தாலும் கூட அவர்களுக்கு முன்போல் தொழில் நடப்பதும் கஷ்டம் வைத்தியர்களுக்கும் முன்போல் பணம் வருவதும் கஷ்டம். ஏனென்றால் இந்த எலெக்ஷன் மூலமாக அவர்களுக்குக் கொஞ்சம் இங்கிலீஷ் நாகரீகம் பிடிபட்டுவிடுகின்றது. அதனால் இங்கிலீஷ் வைத்தியத்தில் ஆசைவிழுந்துவிடுகின்றது. இதுமாத்திரமா இன்னும் ஒரு காரணம் சொல்லுகின்றேன் கேளும்.

ஆ. வே. வை. அது என்னசொல்லும் பார்ப்போம்.

சி. வை. சுயமரியாதை இயக்கம் வந்த பிறகு பெண்களை அதிகமாகப் படிக்கவைக்க ஆரம்பித்துவிட்டார்கள். பெண்களுக்கு சுதந்திரம் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். படிப்பும் சுதந்திரமும் கிடைத்த பெண்கள் புருஷர்களை தாசி வீட்டுக்கு சுலபத்தில் அனுப்புவார்களா? தாசிகளுக்கு மேலாக சிங்காரித்துக் கொள்ளுகிறார்கள். தாசிகளுக்கு மேலாக பேசத் தெரிந்துகொள்ளுகிறார்கள். தாசிகளுக்கு மேலாக மற்ற காரியங்களும் செய்து கணவன் மார்களை அடக்கி ஆள ஆரம்பித்துவிட்டார்கள். இவைகளினால் வாலிபர்களுக்கும் தங்கள் பெண்ஜாதிகளிடம் அதிகமான அன்பு காதல் ஏற்பட்டுவிடுகின்றது. தவிரவும் முன்போல் மாமன் மாமி நாத்தி அதிகாரங்களும் குடும்ப வீடுகளில் குறைந்துபோய்விட்டதால் புருஷன் பெண்ஜாதி மார்கள் அடிக்கடி பேசவும் கொஞ்சவும் தாராளமாய் சௌகரியம் கிடைத்துவிட்டது. இத்தனையும் அல்லாமல் சாரதா மசோதா வேறு வந்துவிட்டது. கல்யாணம் ஆனதும் பெண் எதற்கும் தயாராய் இருக்கின்றது. அதிலும் சுயமரியாதை இயக்கம் ரொம்பவும் முத்திப் போய் புருஷன் பெண்ஜாதிகள் ஒருவரை யொருவர் தாங்களே தெரிந்தெடுத்துக் கொள்ளுகின்ற வழக்கம் ஏற்பட்டுவிட்டது. இப்படிப்பட்டவர்கள் வேறு புருஷனையோ வேறு பெண்ணையோ கவனிப்பது என்பது மிக்க அபூர்வமாகத்தான் இருக்கும். ஆகவே பலவழிகளிலும் இந்த மாதிரி பிழைப்புக்காரர்களுக்குஇனி ஆபத்துதான் அதற்கு யார் என்ன செய்வார்கள். இத்தனை பேர்களுக்கு நல்ல கா

திண்டுக்கல்

திண்டுக்கல் வாலிபர் தமிழ்ப்பயிற்சிக் கழகத்தின் சார்பாக நாவலூற்று திரு சி. சுவாமி சிவநேசம் அவர்கள் தலைமையின் கீழ் பிப்ரவரி 7 ந்தேதி மாலை ஓர் பொதுக்கூட்டம் கூட்டப்பெற்று திரு ஏ. எஸ். நாயகம் திரு. ஏ. நடேசம் ஆகியவர்களால் சுயமரியாதைக் கீதங்கள் பாடிய பின்னர் "நமது முன்னேற்றம்" என்னும் பொருள் பற்றி திருவாளர்கள் என். அனந்தன் திரு. க. வாலையானந்தம் திரு. ஜி மாணிக்கம் ஆகியவர்களால் பேசப்பட்டதின சுருக்கம்:—

நாம் சரிவர கவலை எடுத்துக் கொள்ளாத குறைவாலும் நம் நகரப் பொது மக்களின் உணர்ச்சியையும் அரிய காலத்தையும் பார்ப்பனரின் படுமோச வலையாகிய காங்கிரஸ் (பூரணசுயேச்சை) என்கின்ற பார்ப்பன சுயநலத்திற்கு கட்டுப்பட்டு பயன்படுத்திக் கொள்வதும் தம் மயக்கு மொழிகளால் மக்களை ஏமாற்றுவதும் கண்ட நாம் இனி சும்மா இருக்காமல் ஊக்கமும் உழைப்புமெடுத்து உழைக்க வேண்டுமென்றும் அதற்குரிய நிலையமொன்று விரைவில் நிறுவப்பெற்று தம் கடமைகளைச் சரிவர ஆற்றி வர வேண்டுமென்றும் நம்நாடு விடுதலையடைந்து சுயமதிப்புடன் மக்கள் வாழவேண்டுமாயின் கடவுள் சமயப் பழக்க வழக்கங்களின் பெயரால் நாடோறும் செலவிடும் பல்லாயிரக்கணக்கான பணத்தையும் அரிய காலத்தையும் வீணாக்காமல் கல்வி, கைத்தொழில் ஆராய்ச்சி முதலிய மு

லம் வந்ததுபோல் நமக்கும் வரும். இதைப்பற்றி என் கவலைப்படுகிறீர்கள்.

ஆ. வெ வை. நீ சொல்வதைப் பார்த்தால் இனிதாசி வெசிகளிருந்தாலும்பிரயோஜனப்படாதுஎன்றுதான் எனக்குத் தெரிகின்றது. ஏனென்றால் காலமோ கலிகாலம். ஆளுக்கள் தலைவிரித்து ஆடத் துடங்கிவிட்டார்கள். கட்டுப் பாடெல்லாம் போய்விட்டது, இப்படி யெல்லாம் நடக்குமென்று வெகு நாளைக்கு முன்னமேயே பரமசிவன்பார்வதிக்குச் சொல்லி பார்வதி நந்திக்குச் சொல்லி நந்தி நாரதருக்குச் சொல்லி நாரதர் ரிஷிக்கு சொல்லி ரிஷீ முனிவர்களுக்குச் சொல்லி முனிவர்கள் பெரியோர்களுக்குச் சொல்லி பெரியவாள்நமக்குச்சொல்லிஇருக்கிறார்கள்.

சி. வை. நல்ல காரியமாச்சுது. பின்னையேன் அழுகிறீர் பகவான் முதல் பெரியோர்கள் வரை சொன்ன வாக்கு தவருமா? முதலில் பகவான் தலையில் நெருப்பை வாரிக்கொட்டு என்றீர் இப்போது பகவான் வாக்கு என்கிறீரே. என்ன சங்கதி.

ஆ. வே. வை, என்னமோ சொன்னேன். உண்மை பேசவைத்தது நம்மை கேழ்க்க வைத்தது. நான் போய்வருகிறேன்.

சி. வை. நல்ல காரியம்.

ன்னேற்றவழியில் நம் நாட்டுச் செல்வத்தைவளர்த்துச் சீர்படுத்த வேண்டுமென்றும் பேசினார்கள்.

அறியாமையென்னும் மூடப்பழக்கவழக்கங்களை அழிக்க நம் மாபெரும் தலைவர்களும் தொண்டர்களும் "குடியரசு" "திராவிடன்" என்னும் பத்திரிகை வாயிலாகவும், பிரசங்க வாயிலாகவும், தன்னலமற்ற தொண்டாற்றி வருவதற்கு நன்றி செலுத்தவேண்டும் என்றும் இந்நாட்டில் மனித உரிமை பெறாத ஆறுகோடி மக்களாகிய நம் சகோதரர்களைப் புரக்கணித்தும், கடவுள்,சமையம், என்னும் பெயரால் நடைபெறும் அநீதங்களும் நம் மனித சமூகத்திலிருந்து வுற்க்கி ஒழித்தாலன்றி நமக்கு பூரண சுயேச்சை உரிமை அல்லது ராமராஜியம் தேவையில்லை யென்பதாக நம்பிக்கையும் உறுதியுமுள்ள பொதுமக்கள் நன்குணர வேண்டுமென்றும், இன்னும் பல பொருள்கள் படப் பேசிய வீர மொழிகள் கூட்டத்திடை மிக்க ஆர்வத்தை உண்டாக்கின, தலைவர் உயர் திரு சுவாமி சிவநேசம் அவர்கள் கூறிய முடிப்புரையில் தாம் ஓர் இந்து துறவியாகக்கருதப்படினும் தாம் குறிய நோக்கமும் சமபத்தையும் சேர்ந்தவரல்லவென்றும் மனித வகுப்பில் அன்புச் சமயமாகிய விரிந்த அறிவியக்கத்தைச் சேர்ந்தவரென்றும் பொது மக்களின் சமூகத் தொண்டாற்றுவதே தமது கொள்கையும், கடமையுமென்றும். சமூகப் பணியையே தாய் நாட்டு விடுதலைப் பணியாகத் தம்மன மொழிமெய்களாற்றொண்டாற்றி வருவதாகவும் திண்டுக்கல்லிலும ஓர் நிலையம் நிறுவப்பெற்று இந்நகரிலும் நகரின் 10 மைல் சுற்றளவுள்ள கிராமங்களிலும் அடிக்கடிபிரசாரவாயிலாகவும் துண்டுத்தாட்கள் வாயிலாகவும் தொண்டாற்றி வரவேண்டுமென்றும் ஒரு சில வாலிபர்களாகிய அன்பர்கள் என்னைத் தூண்டி வந்தமையாலயானும் உடன் பட்டு சேர்மென் திரு எம். எஸ். பி. சோலை அவர்களையும், வழக்கறிஞர் திரு. ஆர். ராமசாமி அவர்களையும் கலந்து பேசியிருப்பதாகவும் அடுத்தவாரம் அக்கூட்டத்திற்கு திரு சி திரு. கே. எ. பி. விஸ்வநாதம், பட்டுக்கோட்டை அழகர் சாமி முதலியினோரின் வரவை எதிர் பார்த்திருப்பதாகவும் இது போழ்து திண்டி மாநகர் வாலிபரிடை ஓர் புத்துணர்ச்சி பயக்கத்தக்க அறிகுறிகள் காணப்படுவதால் தம்மாலியன்ற உதவியுடன் ஒத்துழைக்க முன் வருவதாகவும் மிக ஆற்றலும் உணர்ச்சியும் ததும்பப் பேசி முடித்தார்கள்.

மேட்டு ராசக்காள் புர பழந் தமிழ் மக்களில் (ஆதிதிராவிடர்) பெரும்பாலாக ஆண்களும் பெண்மணிகளுமாகச் சுமார் 500 பேர்கள் வரை மிக அமைதியுடன் குழுமியிருந்த காட்சி மிகவும் போற்றத்தக்கதாகும்.

குழுமியிருந்தவர்களில் முக்கியஸ்தர்கள்;—திருவாளர்கள் டி. சி. எம். ராஜக், பூ. ஏ. நடேசம், எ. எஸ். நாயகம்,கே.நடேசம்,எம். கிருஷ்ணன், வேணுகோபால், எல். பெருமாள் என்.

செங்குந்தர் மகாநாடு துடுப்பதியில் கூடியது

(ஒரு நிருபர்)

கோயமுத்தூர் செங்குந்த மகாஜன பதினேழாவது மகாநாடு ஈரோடு தாலூக்கா துடுப்பதியில் 15, 16-ந் தேதிகளில் நடைபெற்றது. அநேக பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தார்கள் உபசரணைத் தலைவர் திரு. சி. ராமசாமி முதலியார் அவர்கள் வரவேற்புப் பிரசங்கம் செய்தார். சித்தூர் வக்கீல் திரு. எஸ். ரங்கநாத முதலியார் அவர்கள் சபாநாயகராக வீற்றிருந்து ஒரு அருமையான சொற்பொழிவு நிகழ்த்தினர். கல்வியின் அவசியம், சிறுபான்மைத் தொகுதியர்களுடைய கூட்டுறவின் அவசியம், தீண்டாமை விலக்கு, மதுவிலக்கு, பொட்டுக்கட்டும் தீயவழக்கத்திலிருந்து "தேவதாசிகள்" விடுதலை அடையும்படி செய்தல் ஆகிய விஷயங்களைப் பற்றி சாங்கோபாங்கமாகப் பேசினர்.

சங்கத்தின் காரியதரிசி திரு. டி. ஆர். முத்துமாணிக்க முதலியார் அவர்களின் வருஷாந்த அறிக்கைப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்டது. இதற்கு மேல் திருவாளர்கள எஸ். சீனிவாச ராகவ ஆச்சாரிபி. ஏ. எல். டி. ஈ.வெ. இராமசாமியார், டி. என். தீர்த்தகிரி முதலியார், கோவை சி. பி. சுப்பயா, சி. பி. வில்வநாதன், மா. சுபரமண்யம் ஆகியவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

ராஜவிசுவாசமும் வைசிராய் பாராட்டுதலும் தீர்மானித்தபின்பு.

2. சமூக சீர்திருத்தத்திற்கு அவசியமான சட்டங்கள் பிறப்பிக்க வேண்டுமெனறு இச்சங்கம் கோரி வந்த வண்ணம் சட்டங்கள் நிறைவேற்றப் பட்டதைக் கண்டு இம்மகாநாடு சந்தோஷப்படுவதோடு, அவைகளை அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்றும்.

3. சமூக சீர்திருத்த சட்டங்கள் அமுலுக்கு வரும்போது "மதம் அழிந்து விடுமே" என்று சொல்லி கிளர்ச்சி செய்யும் வர்ணசிரமிகளின நடத்தையை கண்டித்தும்.

4. சென்னைசட்டசபையில்ஸ்ரீமதி டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி அவர்களால் தாசி மானியபூமி சம்பர்தமாய் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றியதற்கு அந்த அம்மையாருக்கும் அவருக்கு ஆதரவு அளித்த சகலருக்கும் வந்தனமளித்தும்.

5. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் கொண்டு வந்திருக்கும்தேவதாசி மசோதாவை ஆதரித்தும்.

6. திரு. எம். ஆர். ஜெயகர் அவர்கள் இந்திய சட்டசபையில் கொண்டு வந்திருக்கும் தீண்டாமை ஒழிக்கும் மசோதாவையும், மதத்தின் பெயரால் பொட்டுக்கட்டி பெணகளை தீயவழியில் விடும் வழக்கத்தை ஒழிக்கும் மசோதாவையும் ஆதரித்தும்.

7. மது இலாக்கா மந்திரி அவர்களால் ஆரமபிக்கப்பட்ட மது விலக்குப்பிரசாரத்திற்கு நன்றி செலுத்தியும்.

8. சுயமரியாதைத் திருமணங்கள் இம்மரபில் பலர் செய்து கொள்வதை ஆதரித்தும்.

பல தீர்மாணங்கள் செய்தபின்நிர்வாக சபைஉத்தியோகஸ்தர்கள தெரிந்தெடுக்கப்பட்டு மகாநாட்டின் நடவடிக்கைகள்இனிது பூர்த்தி ஆயின.

மாரிமுத்து. ஆர். முத்துகிருஷ்ணன், மணியம் ஆரோக்கியம், நாட்டாண்மை அரோக்கியம் மரிய சூசை, எ. ஆரோக்கியசாமி, ஓய்-செபஸ்தியார், எ. ஆரோக்கியம், டி. சின்னத்தம்பி; எ. சூசை அந்தோனி, எஸ். சூசை அந்தோனி, எஸ். சவரிமுத்து, டி. பரஞ்ஜோதி, ஓய். சவரிமுத்து, ஜி. ஞானப்பிரகாசம், எஸ். ராயர், ஏ. செபஸ்தியான். பிச்சைமுத்து ஏ. பிச்சைமுதலி, எஸ். மரியசூசை எஸ். சவரிமுத்து முதலியோர்களாவர்.

ஒரு நிருபர்

"சுயமரியாதைத் தொண்டன்" பத்திரிகை ஆவலாதிகளுக்கு

இவ்வேழு வாரமாக தொண்டன் வெளிவந்து மனம் களிப்படைய முடியவில்லையே என்ற கவலையே பெரிதாகக் கொண்டு அதிக ஆவலுடன் எதிர்பார்த்தும் பலமுறை கடிதம் எழுதும் அன்பர்களுக்கு வணக்கமாய் தெரிவித்துக் கொள்வதாவது.

தவிரவும் "தொண்டன்" தினே தினே வளர்ச்சியடைந்து வருவதால் தற்போதுள்ள பிரசில் பதிப்பித்து அன்பர்களின் ஆவலை பூர்த்தி செய்ய இயலாததை முன்னிட்டு வேறு பெரியதான மிஷினை செப்பனிடுவதென்ற நோக்கத்துடன் நிறுத்தி வைத்துள்ளோம். ஆகையால் இன்னும் 15 தினத்துள் 16 பக்கங்களுடன் அழகாக புதுமாதிரியில் தொண்டன் மிளிர்ந்து உங்கள் அகக்களிப்பூட்டுவான என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம,

மானேஜர்

எஸ். சாமிநாதன்

பெண் தேவை.

கும்பகோணத்திலிருந்து கொடாச்சேரி 29-ம் நம்பர் ரோட்டில் ஓடும் மோட்டார் பஸ்ஸில் டிரைவராக 75-ரூ. சம்பளத்தில் இருந்துவரும் 25-வயதுள்ள ஒருவருக்கு அழகு வாய்ந்ததாகவும் படித்ததாகவும் வயது 16 அல்லது 17 க்குள் ஒரு மணமகள் தேவை. எந்த ஜாதியாயிருந்தாலும் சரி. இஷ்டமுள்ளவர்கள் என் அட்ரசுக்கே தெரியப்படுத்தவும்.

S. DURAI,
Kordachcherry,
Tanjore District.

"சித்திரபுத்திரன்"

ஆஸ்த்திகப்பெண்!— என்ன அய்யா நாஸ்த்திகரே மனுதர்ம சாஸ்திரத்தில் மற்ற விஷயங்களைப் பற்றிய ஆட்சேபனைகள் எப்படி இருந்தாலும் பெண்களை கடவுளே விவசாரிகளாய் பிரப்பித்து விட்டார் ஆதலால் அவர்கள் விஷயத்தில் ஆண்கள் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டுமென்று சொல்லி இருப்பது மாத்திரம் பெரிய அயோக்கியத்தனம் என்பதே எனது அபிப்பிராயம். அது விஷயத்தில் நான் உங்களுடன் சேர்ந்துகொள்ளுகிறேன்

நாஸ்திகன்:- அம்மா அப்படி தாங்கள் சொல்லக்கூடாது. மனுதர்ம சாஸ்திரத்தில் மற்ற எந்த விஷயங்கள் அயோக்கியத்தனமாக இருந்தாலும் இந்த விஷயத்தில் மனுதர்மசாஸ்திரம் சொல்லுவதை நீங்கள் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

ஆ பெண்:— அதென்ன அய்யா நீங்கள் கூட அப்படிச் சொல்லுகின்றீர்கள்? இதுதானு உங்கள் அறிவு இயக்கத்தின் யோக்கியதை? எல்லா பெண்களுமா விவசாரிகள்?

நா:— ஆம் அம்மா எல்லோருமேதான் "விவசாரிகள்" இதற்காக நீங்கள் கோபித்துக்கொள்வதில் பயனில்லை.

ஆ பெண்:— என்ன அய்யா உலகத்தில் உள்ள பெண்கள் எல்லோரையுமா நீங்கள் விவசாரிகள் என்று நினைக்கிறீர்கள்.

நா:— ஆம். ஆம். ஆம். இந்த உலகத்தில் உள்ள பெண்கள் மாத்திரமல்லமேல் உலகத்தில் உள்ள பெண்களையும் கூடத்தான் நான "கற்பு உள்ளவர்கள்" என்று சொல்லுவதில்லை

ஆ. பெண்:— இப்படிச் சொல்லுவது தர்மமாகுமா!

நா:— கடவுளால் உண்டாக்கப்பட்ட வேதத்தின் சாரமான மனுதர்மசாஸ்திரம் சொல்வது எப்படி பொய்யாகும் - அதர்மமாகும் சொல்லுங்கள் பார்பபோம். வேண்டுமானால அதுசரியென்று நான் ருஜுப்படுத்தவும் தயாராயிருக்கிறேன்.

ஆ. பெ. என்ன ருஜு நாசமாய்ப் போன ருஜு சற்று காட்டுங்கள் பார்ப்போம்.

நா:— நமது பெரியவர்கள் கற்பைப் பரீக்ஷிக்கத்தக்க பரீக்ஷைகள் வைத்திருக்கின்றார்கள் ஆதலால் அவர்களை நாம் சுலபத்தில் ஏமாற்றிவிட முடியாது.

ஆ-பெ:- என்னபரீக்ஷை ஐயா அது

நா:— சொல்லட்டுமா கோவித்துக் கொள்ளக்கூடாது.

ஆ-பெ:— கோபமென்னையா மடியில் கனமிருந்தால் தானே வழியில் பயம். தாராளமாய்ச் சொல்லுங்கள்.

நா:— தெய்வம் தொழாள் கொழுனைத்தொழுவாள் பெய்யெனப் பெய்யுமழை என்கின்ற பொய்யாமொழிப் புலவரின் வேதவாக்கைக் கேட்டிருக்கிறீர்களா

ஆ-பெ:- ஆம் கேட்டிருக்கின்றேன்.

நா:— கற்புடைய மங்கையர்கள் மழை பெய்யென்றால் பெய்யும் என்கின்ற வேதவாக்கையும் கேட்டிருக்கின்றீர்களா.

ஆ-பெ:— ஆம் கேட்டு இருக்கின்றேன்.

நா:— சரி. .... ஊரில் மழை பெய்து மூன்று வருஷமாச்சது குடிக்கத்தண்ணீர் கிடையாது. தயவுசெய்து ஒரு இரண்டு உளவு (2 அங்குலம்) மழை பெய்யச்சொல்லுங்கள் பார்ப்போம்.

ஆ-பெ:— இது நம்மாலாகின்ற காரியமா தெய்வத்திற்கு இஷ்டமிருந்தாலல்லவா முடியும் இந்த ஊர்காரர்கள் என்ன அக்கிரமம் பண்ணினார்களோ அதனால் இந்தப்பாவிகள் மழை இல்லாமல் தவிக்கின்றார்கள்.

நா:— எந்தப்பாவி எப்படித்தவித்தாலும் நீங்கள் கற்புள்ளவர்களாயிருந்தால் மழை பெய்யென்றால் பெய்துதானே ஆகவேண்டும். அல்லது இந்த ஊரில் ஒரு கற்புள்ள பெண்ணாவது இருந்தால் மழை பெய்துதானே தீரவேண்டும். எப்போது பெண்கள் சொன்னால் மழை பெய்வதில்லையோ அப்போதே பெண்கள் எல்லாம் கற்புள்ளவர்கள் அல்ல—"விபசாரிகள்" என்று ருஜுவாகவில்லையா? பொறுமையாய் யோசித்துப் பாருங்கள். ஆகையால் இனி மேல் சாஸ்திரங்களைப்பற்றி சந்தேகப்படாதீர்கள். அதிலும் ரிஷிகளும் முனிவர்களும் சொன்ன வாக்கியமும் கடவுள் சொன்ன வேதத்தின் சத்தாகியதும் இந்து மதத்திற்கு ஆதாரமானதும் மோக்ஷத்திற்கு சாதனமானதுமான மனுதர்மசாஸ்திரம் பொய்யாகுமா அம்மா? அதனால்தானே நான்கூட கல்யாணமே செய்துகொள்ளவில்லை.

ஆ, பெண:— எதினால்தான்?

நா:- பெண்களைக் கல்யாணம்செய்து கொண்டால் புருஷன்மார்கள் அவர்கள் விவசாரித்தனம் செய்யாமல் ஜாக்கிரதையாய்க் காப்பாற்ற வேண்டுமென்றிருக்கிறதினால்தான்.

ஆ. பெ.:— பின்னை என்ன செய்கின்றீர்கள்.

நா.:— கடவுளோ பிறவியிலேயே பெண்களை விவசாரிகளாய் பிறப்புவித்துவிட்டார். யார் காப்பாற்றப் பார்த்தும் முடியாமல் போய்விட்டது. ஒரு சொட்டு மழைக்கும் வழியில்லை. ஆதலால் எவனோ கட்டிக்கொண்டு காப்பாற்றட்டும். கடவுள் செயல் பிரகாரம் நமக்கு கிடைப்பது கிடைக்கட்டும், என்பதாகக்கருதி சிவனே என்று உட்கார்ந்து கொண்டிருக்கின்றேன். மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்ற மாட்டானா, என்கின்ற தைரியம் உண்டு.

ஆ. பெ.:— அப்படியானால் நீங்கள் முன் சொல்லிக் கொண்டிருந்ததில் ஒன்றும் குற்றமில்லை. இந்த மனுதர்மசாஸ்திரமும் வேதமும் பொய்யாமொழியும் நீதியும் இவற்றை உண்டாக்கியதோ, அல்லது ஒப்புக்கொண்டதோ ஆனகடவுள்களும் நாசமாய்ப் போகட்டும். இனிமேல் இந்த ஆஸ்திகம் நமக்கு வேண்டவே வேண்டாம். நமது எதிரிகள் நாட்டுக்கும் வேண்டாம்,

அகில இந்திய சத்ய சோதக் மகாநாடு

அதாவது அகில இந்திய உண்மைநாடுவோர் சங்க மகாநாடு.

14-வது அகில இந்திய சத்ய சோதக் மகாநாடு மார்ச்சு மாதம் 8, 9 தேதிகளில் தீன மித்ரா பத்ரிகையின் ஆசிரியரும் எமது ஒப்புயர்வற்ற நண்பருமான ராவ் சாகிப் முக்கன்தராவ் கன்பட்ராவ் பேட்டில், அவர்களது தலைமையில், பம்பாய் பேரல் தாமோதர தேக்கர்சேஹாலில் நடைபெறும். இந்த சமாஜம் மகாராஷ்டிர ஆதி சமூக சீர்திருத்தக்காரரான மகாத்மா ஜோதிபாபுலே அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இதன் கொள்கைகள் ஜாதிக் கொடுமைகளை யொழித்தலும், புரோகிதராட்சியை யழித்தலுமாகும், தற்சமயம் வெறுக்கத்தக்கதும் பல கொடுமைகளை யிழைப்பதுமான சமூக சூழல்களைப்போக்கி, உண்மையான தேசிய இந்தியாவை ஸ்தாபிக்க எண்ணும் ஒரு சிறந்த பகுத்தறிவாளர் இயக்கமாகும்.

இந்து தேச மக்களின் அதி நெருக்கடியான இந்நிலையில் மேல் கண்ட கொள்கைகள், பொதுவாக இந்திய வாழ்க்கைக்கு சிறப்பாக இந்து சமூக வாழ்க்கைக்கும் அவசியமாயிருத்தல் வேண்டும்.

ஆகையால் இத்தகைய அரிய கொள்கைகளை ஆதரிக்கும் ஒவ்வொருவரும் மகாநாட்டிற்கு விஜயம்செய்யக் கேட்டுக்கொள்ளுகிறேன். மகாநாட்டு நடவடிக்கைகளில் கலந்து கொள்ள பிரியமுள்ளவர்கள் பிப்ரவரி மாதம் 25 தேதிக்குள் அறிவிக்கவேண்டுகிறேன். என்றுபொது காரியதரிசி ரகுநாத் தேவாஜி பேங்கார் எழுதுகிறார்.

கோடைக்கானல் காட்ரோட்டில் 22—2—30 முதல் பஸ்கள் விடப்பட்டது.

கொடைக் கானல் காட்ரோட் மழையினால் சேதப்பட்டு பஸ், கார் வண்டிகள் பிரயாணம் 12 நாளாய் நின்று இருந்தது இன்று முதலில் கனம் பி டப்ளியூ இஞ்சினீயர் துரை மெக்காய் அவர்களும்சப்டிவிஷன் ஆபீசர் அவர்களும் தனது சொந்தகாரிலும் நாடார் மோட்டார் சர்வீஸ் 2 புது பஸ்களில் பி. டப்ளியூ ஓவர்சியர்கள் அனைவரும் டிரயல் பார்ப்பதற்காக நாளது தேதி காலையில் அடிவாரம் இருந்து புறப்பட்டு காலை 11 மணிக்கு கொடைக்கானல் வந்து சேர்ந்தார்கள். கனம் இஞ்சினீயர் துரை அவர்களும் சப்டிவிஷன் ஆபீசர் அவர்களும் கூலீஸ்களும் 21 தேதி இரவு 11 மணிவரை காட்ரோட்டில் எலக்டிரிக்விளக்குபோட்டு வேலை நடத்தி வந்தது மெச்சத்தக்கது. 27 தி மேற்படி கூலிகளுக்கு கனம் துரை அவர்கள் ஒரு விருந்து கங்குவார்பட்டியில், செய்வார்கள். என நமது சொந்த நிருபர் அறிவிக்கிறார்.

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

றார், என்னே கம்பர் தம்மன நிலை!!

அனுமான் சீதை வரலாற்றை இராமனிடம் கூறினான் என்பதோடு வால்மீகி சுந்தர காண்டத்தை முடிக்கிறார். கம்பரோ அத்துடன் நில்லாது சுக்கிரீவன் எழுந்துத் தனது சேனைகளைப் படைகொடு தென்திசை நோக்கிச் செல்ல ஏவி நீலனை முன்னணியில் வழி காட்டிப் பகை வாவராது பாதுகாத்துப் போம்படி கட்டளை யிட்டானென்றும், அனுமன் வேண்டிக் கொள்ள இராமன் அனுமனுடைய தோளிலும் அங்கதன் வேண்டிக் கொள்ள அவன் தோளில் இலக்குவனும் எதிக்கொண்டு புறப்பட்டனரென்றும், அவர்கள் மலை வழியாகவே வந்து பன்னிரண்டாவது நாளில் தெற்குக் கடலைக கண்டார்களென்றும் கூறிச் சுந்தரகாண்டத்தை முடிக்கிறார். இத்துடன் சுந்தர காண்ட ஆராய்ச்சி முடிவு பெறுகிறது. இனி தொடர்ந்து உயுத்தகாண்ட ஆராய்ச்சி வெளிவருவதாகும்.

குறிப்பு:- சுந்தரகாண்டம் முற்றுப் பெற்றது.

காரைக்குடி

நலஉரிமைத் தொண்டர் சங்கத்தின் சுக்கில வருஷம் மாசி மாதம் 5-ந் தேதி கூடிய நிர்வாக கூட்டத்தில அடியில் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. நாளது மாசி மாதம் 4 தேதி வரையுள்ள சங்க வரவு செலவு கணக்குகள் வாசிக்கப்பெற்று அங்கீகரிக்கப்பட்டது.

2. 26—2—30 முதல் 6 நாட்கள் இவ்வூர் சேணியர் தெருவில் ராம நாடகம் (தெருக்கூத்து) நடைபெறப்போவதை முன்னிட்டு ஏராளமான ஆண்களும் பெண்களும் கூடுவார்களாதலால் அவர்கள் தெருவில் மல ஜலம் கழிப்பதற்கு வேண்டிய வசதிகள் பலவும் செய்யவேண்டுமெனவும். போலீசு பந்தோபஸ்து செய்யும் படியும்,

3. அத்தெருக்கூத்து விஷயமாக சங்கத்திலிருந்து துண்டு பிரசுரம் வெளியிடவும் பிரசாரங்கள் செய்யவும்

4. இவ்வூர் மூன்றாவது வார்டில் ஆ. த. மெ. மெய்யப்ப செட்டியார் வீட்டிற்கும், நா. ரு. லெ. சுப்பய்யா செட்டியார் வீட்டிற்கும் மத்தியிலும், சேணியர் தெருவில் இருக்கும் ஆபாசத்தையும் சாக்கடைத் தண்ணீரையும் எடுக்கச் சொல்வதுடன் அவ்வீதியை செப்பனிடச் செய்யுமாறும் ஷை வார்டைச் சேர்ந்த சந்திலிருக்கும் ஆபாச நிலைமையை போக்க வேணுமாயும்

5. 11வது வார்டில் உள்ள பல சந்துகள் செப்பனிட கூடிய விரைவில் வேலைகள் ஆரம்பிக்கும்படியும் முனிசிபாலிட்டியாரைக் கேட்டுக் கொள்ளுகிறது என்கிற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

3-ம் பக்கத் தொடர்ச்சி

வைத்தியக்கோ கெட்ட பேருகிறைக்கிறது ஆனால் அந்த வியாதியின் ஆதிக்கத்தைக் கெடுத்து அவனுக்குப்பின்னால் அந்த வியாதியின் உபத்திரவத்தை யடக்கினது அவன் கொடுத்த ரசகெந்தி பாஷாணம். ஸால்வசான் என்னும் மருந்தும் பாஷாணமே மூன்று நான்கு தடவை அந்த மருந்தை ரத்தத்தில் செலுத்தி விட்டால் அந்த வியாதியின் மும்முரம் தீர்ந்ததே ஒழியவியாதி ஒழியாது. பின்னும் அநேக நாள் ரசம் சேர்ந்த மருந்துகளும் சாப்பிட வேண்டும். இப்பொழுது ரசம் சேர்ந்த பலவித மருந்துகள் செய்திருக்கிறார்கள். அந்த ரசத்தைப் பக்குவப்படுத்தி ரெத்தத்தில் ‘செலுத்தும்படியான மாதிரியாகவும் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. மேனாட்டு ரசாயன சாஸ்திர ஆராய்ச்சியின் உதவியால் அவர்கள் பலதைச செய்ய வசதிகளும் அவ்விடத்துப் பிரபுக்கள் அதற்காகவே பெரும் தொகைகள் தருமமாகக் கொடுப்பதால் முயற்சிகளும் அவர்களிடமிருக்கின்றன. நமக்கோ அவைகளில்லை. நமது ஆராய்ச்சியோ வைகுண்டத்திற்கு வழி கண்டுபிடிப்பதிலும் கைலாசத்திற்கு எல்லைக்கரை போடுவதிலுமிருக்கிறது. நமதுபிரபுக்கள்பணமோ அவர்கள்செத்துப்போன உடன் அவர்கள் போகுமிடங்களான வைகுண்டத்தின் வழியைச் செப்பனிடவும் கைலாசப் பள்ளத்திற்குப் பாலங் கட்டவும் அதில் சுகமாகப் போவதற்கு அங்கொரு மோட்டார் கார் வாங்கி வைத்திருக்கவும் அவர்களை அதிலேற்றி சிவனிடமும் விஷ்ணுவிடமும் கொண்டுபோய்ச் சேர்க்க இங்கே ஒண்ணரைவயிர் தின்று கொழுத்திருப்பவர்களுக்குப் பின்னுமிரண்டுவயிர் உண்ணச் கொடுத்து அஜீரணத்தை உண்டாக்கக் கொடுக்கப்படுகிறது. நோய்வாய்ப் பட்டவாகளுக்கு உதவி செய்யாதவன் வைகுண்டம் கைலாசம் ரோட்டுக்குப் போகவும் பார்க்கவும் யோக்கியதை யுடையவனல்லன் என்று தெய்வம் தடுத்துப் போட்டிருக்கும் சட்டம் இவர்களுக்குத் தெரியாது.

நமது வையித்திய முறைகளை அப்பன் மகனுக்கும்பாதி சொல்லிக்கொடுப்பான் மகன் அதில் காலே மறந்து மீதமுள்ள காலும் அவனோடு போய் விடும். இப்படியேநமதுமுன்னோர்கள் கண்ட முறைகளெல்லாம் போயிற்று. என்றாலும் சித்தர்கள் கண்ட முறைகள் இன்னும் அநேகம் இருக்கின்றன. சித்த வைத்தியத்தில் ஊக்கமுள்ள சங்கங்கள் அம் முறைகளை யெல்லாம சேகரித்துவிடும். நமது சித்தர்கள் முறையான ரசபாஷாணவகைகளை உபயோகிக்கும் மாதிரிகளிலும் கொடுக்கும் அளவுகளிலும் சிறிது மாறுதல் செய்யவேண்டுமே ஒழிய ரசததாலும் பாஷாணத்தாலும் நாம் புதிதாகக் கண்டுபிடிக்கவேண்டிய மருந்தில்லை. ஆகாரத்தை அள்ளி வாரி உண்டு மனேதிடமும தேக உபத்திரவத்தை சகிக்கும் தன்மையுமிருந்த நமது முன்னோர்களுக்கு ஆகாரத்தை ஒதுக்கித் தள்ளித் தொடட்டுத்துண்டு காபியே கெதி யென்று நினைக்கும் மனக் கோழையும் தேகவலியை சகிக்கும் திறத்தில் பழக்கப்படாத இக்காலத்தவர்க்கும் ரசபாஷாண மருந்தின் அளவு உபயோகிக்கும் முறை முதலியவைகளைப் பற்றி சித்த வைத்தியசாலை உணர்ந்திருப்பதாகத் தெரிகிறது. இவர்களால் நமது வைத்தியம் விருத்தி யடைந்துவிடுமென்று நினைக்கிறேன்.

நியுஸால்வசான் ஜாமன் சண்டைக்கு முன் ஐந்து ரூபாயிக்குக் குறைவாகவே யிருந்தது. சண்டை வந்தவுடன் ஒரு வேளை மருந்து 15 50 75 100 150 ஆக விலை எறிவிட்டது. அவசியம் அந்த மருந்து வேண்டியவர்களும் பணக்காரர்களும 100 150 கொடுத்து வாங்கினார்கள். இதற்கு மத்தியில் அம்சால்வஸ் சப்சால்வஸ் முதலிய மருந்துகள் தோன்றிபத்தும் பதினைந்திற்கும் விற்றது. இது சால்வசான்மாதிரி அவ்வளவு குணமுடையதல்ல. சண்டை நின்றதும் திடீரென்றுவிலைகுறைந்து இப்பொழுது ஒரு ரூபாய்க்குள் வந்து விட்டது. இந்த மருந்தை இன்ஜக்ஷன் சேசவப்பை செய்தால் முப்பது ரூபாயும் மேஜர் எல்லீஸ் செய்தால் ஐம்பது ரூபாயும் வாங்கிவந்தார்கள். அப்பொழுது இரத்தக் குழாயில் அந்த மருந்தைச் செலுத்துவது சென்னை டாக்டர்களுக்குத்தான் செவ்வையாகத் தெரியும். இப்பொழுது ஜாக்கிரதையாகக் கவலையோடு செய்கிற எந்த டாக்டர்களும் செவ்வையாகச் செய்கிறார்கள்; அதிலும் இப்பொழுது புதிதாகப் பாஸ் செய்துவரும் டாக்டர்களுக்கு இது சர்வ சாதாரணமாகும்.

மருந்து விலை அதிகமாகஇருந்ததினாலும் அந்த மருந்தின் குணம் விசேடமாக விருந்ததினாலும் முதல் முதல் பணம் அதிகம் வாங்கப்பட்டபடியாலும் ஸால்வசான் இன்ஜக்ஷனுக்குப் பணம் பலமாதிரியாக நோயாளியையும் டாக்டர்களையும் பொருத்து வாங்கப்பட்டது. அதைப் பின்னால் நிருத்திக்கொணடு எல்லா இன்ஜக்ஷனுக்கும் இப்பொழுதும் பணம் வாஙகுகிறார்கள். ஜனங்களும்“நாலு ஊசிகளுக்குப பணம் கொடுத்தேன். எட்டு ஊசிகளுக்குப் பணம் கொடுத்தேன் இன்னும் நாலூசி போடவேண்டும்” என்கிறார்கள். எந்த மருந்து எந்த ஊசி யென்பது ஜனங்களுக்குத் தெரியாது. அதன் விபரத்தை ஜனங்களிடம் டாக்டர்களும் சொல்லுவதில்லை. கிராமங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்கு ஸால்வசான் மருந்து ஏழைகளுக்குக் கொடுக்கும்படியாக சப்ளை செய்தும மருந்து வாங்கிவர சக்தியுடைய ஏழைக்கு ஆஸ்பத்திரியில் தருமமாக இன்ஜக்ஷன செய்யவும் ஆஸ்பத்திரியின் கருத்தாக்கள் ஏற்பாடுபண்ணினால் பெரும் தருமமாக விருக்கும்.

நமக் குள்பணக்காரரே யானாலும் நோயுற்றால் அவர்களை வேண்டியபடி கவனிப்பதும் அவசியமானதை அகாலத சமயத்திறதுக்கபடி உபசரிப்பதும் பூரணப்படுவதில்லை என்றே சொல்ல வேண்டும். நமது ஜனங்களுக்கும் இதில் பழக்கமே சுருக்கம். புத்தி நுட்பமில்லாதவர்களும் பொருப்பில்லாதவர்களும் வேலைபாட்களுமே வியாதி யுடையவனைக் கவனிக்கவப்படுகிறார்கள். ஒருவன்நோயடைந்தால் அவனை பந்துக்களும் சிநேகிதர்களும் போய் பார்த்து பந்துத்துவம் சிநேகித அன்பு முதலியவைகளைக் காட்டி அவனுக்கு வேண்டிய உதவி செய்வதேபோய்ப் பார்ப்பதின் நோக்கம். இதற்கு எதிரிடையாகவே அவை நடந்து வருகின்றன. போனவர்களெல்லாம் வியாதியுடையவனிடம் பேசவேண்டும். ஒவ்வோர் வைத்தியம சொல்ல வேண்டும், பத்தியம் ஆகாரம் விதிக்கவேண்டும் அவனிடமேகூட்டம் போட்டு பலதையும்பேச வேண்டும். இவர்களுக்கு தண்ணி, வெற்றிலை பாக்கு காபி, குளி, சாப்பாடு, வேஷ்டி, படுக்கை, மரியாதை இததனையும் நடக்கவும்வேண்டும்இவ்வுபசரிப்பால் வீட்டு எஜமானிச்சியும் வேலையாட்களும் உதவி செய்ய வந்த பக்கதது வீட்டுக்காரர்களும் களைத்துப்போய் தூக்கம்கெட்டு நோயாளிக்கு வேண்டிய சமயத்தில் வேண்டியது செய்ய முடியாமலும்போகிறது. இராக்காலத்தில் நோயாளிக்குச சில சமயஙகளில் தாகத்திற்கு தண்ணிகொடுப்பதும் தவக்கப்பட்டு எல்லாரும் களைத்துத் தூங்கி விடுவார்கள் தூங்கினால் எல்லோரும் தூங்குவார்கள், விழித்திருந்தால் எல்லாரும் விழித்திருப்பார்கள். பெரிய வீட்டுகளில் எப்பொழுதுமிருக்கும் கூட்டத்தால் பெண்ஜாதி வந்து புருடனைப் பார்க்கவும் புருடன் பெண்ஜாதியைப் பார்க்கவும் பெண்கள் நோயாளிக்கு உபசரணை செய்யவும் முடியாமலும் போகிறது. கிராமத்திலிருந்து நகரங்களுக்கு நோயாளியை வைத்தியத்திற்குக் கொண்டு போனால் அவனுக்காக அங்கே போக வேலைக்காரன் அங்குபார்க்க வருகிறவர்களுக்கு வேலை செய்து களைத்து நோயாளி இறந்து விட்டாலும் நமக்குத் தொல்லை தீரும் என்று கூடநினைப்பான் கோதானம், பூதானம், செய்தாலும் பக்கத்திலிருந்து பாடுபடும் வேலைக்காரனுககு வியாதியஸ்தன் பிழைத்தால் தானும் செத்தால் தன் பெண்ஜாதி பிள்ளைகளும் முன் கூலிக்கு மேல் கொடுப்பவர்கள் அநேகமாக இல்லை. ஆனால் நோயாளி சிறிது உதவி செய்யச் சொல்லிச் செத்தவர்களுண்டு பின். பெண்ஜாதிபிள்ளைகள் ஒன்றும்கொடுக்காமலிருந்ததும்அநேகமுண்டு.இதில் எனக்குளள அனுபோகங்களை எழுதினால் பத்திரிகை தாங்காது கடைசியாக எனது அபிப்பிராயம் நமது நாட்டில் வியாதிஸ்தர்களைக்கவனிப்பதற்காக ஒரு பள்ளிவைத்துப்படிப்பித்து வைத்தியசாலையிலும் நோயாளிக்கிடையே பழக்க வைதது அநேகரை தயார் செய்து விட்டால் வியாதியையுடைய பணக்காரர்களுககும்

அர்ச்சகர்கள் அறைவது கடவுள்களின் மகிமை

ரத உர்ச்சவங்களில் தேர் இருசு ஒடிந்து சாய்ந்து விடுகின்றது.

தேர் நெருப்பும் பிடித்து வெந்து போவதுடன் சுவாமியைக் காப்பாற்ற முயற்சித்தவனையும் எரித்து விடுகின்றது.

சப்பிரங்கள் சாய்ந்து கீழே விழுந்து சாமிகளுக்கு கை கால் ஒடிந்து போகின்றது.

தேர் இழுக்க ஆட்கள் கிடைக்காமல் பலநாள் சாமி நடுத் தெருவில் நின்று தவிக்கின்றது.

கடவுள்களின் தயாள குணம்.

திருடன் அம்மனின் தாலியை அறுக்கும்போது பார்த்துக்கொண்டிருக்கிறது.

திருடன் சேலையை அவிழ்த்துக் கொண்டு அம்மனை நிர்வாணமாக விட்டு விட்டு ஓடுவதைப் பார்த்துக் கொண்டே இருககின்றது.

அர்ச்சகர்கள் சாமிகளின் மீது இருக்கும் தங்க நகைகளை எடுத்துக் கொண்டு கில்ட்டு நகைகளைப் போடுவதைப் பார்த்துக்கொண்டே இருக்கின்றது.

அர்ச்சகர்கள் சாமிகளுக்குப் போட்ட நகைகளில் உள்ள வைரம் கெம்பு முதலிய இரத்தினஙகளைப் பெயர்த்து விட்டு கண்ணாடித்துண்டை ஒட்ட வைப்பதைப் பார்த்துக்கொண்டே இருக்கின்றது.

கோவில் சிப்பந்திகள் சுவாமியை ஆட்டி கீழே உருட்டித்தள்ளி விட்டு அடியில் இருக்கும் தங்கம் ரத்தினம் ஆகியவைகளை பொருக்கிக்கொண்டு போவதைப் பார்த்துக்கொண்டே இருக்கின்றது.

குருக்கள் பூசை செய்யும் போது செங்கல்லைச் சுட்டு ஈரத்துணியைப் போட்டு ஆவி உண்டாகச்செய்து அதையே தளிகையாக பூசை பண்ணுவதையும் பார்த்துக்கொண்டே இருக்கின்றது.

மற்றும் எதிரே என்ன என்னமோ அக்கிரமங்கள் செய்கின்றதையும் பேசாமல் பார்த்துக்கொண்டே இருக்கின்றது. நமது கடவுள்களின் மகிமையும் அவற்றின் சகிப்புத்தன்மையும் நாஸ்திகருக்குக்கூட வராது.

சிறு பணக்காரர்களுக்கும் பெரிய உபகாரமாக விருக்கும். இப்பொழுது நகரங்களிலே நர்சுகளென்னும் தாதிகளிருக்கிறார்கள். அது நகரவாசிகளுக்கும் பெரும் பணக்காரர்களுக்குமே உபயோகப்படும்.கிராமங்களில் அநேக நோயாளியைப்பந்துக்களே மேல்விழுந்து கொன்று விடுகிறார்கள். சுவாமிக்கு மானியம் விடுவதால் தான் சொர்க்க வாசல் திறக்குமென்று நினைத்துக் கொண்டிருக்கும் பணக்காரர்களில் சிலருக்கு இதுதோன்றிவிட்டால் அநேகம் போகள் சௌக்கியமாகவும் திருப்தியுடனும் சாவார்கள்.

குணம் இல்லையாயின் பணம் வாபீஸ்.

தேகாரோக்கியம்.

வைரத்திற்கு மேலானது!

நாராயண சஞ்சீவி லேகியமும்

அயத்தங்க செந்தூரமும்

இரத்தத்தை சுத்தி செய்து, நரம்புகளை முறுக்கேற்றி, தேக அழலையைப் போக்கி, சீதோஷ்ணத்தை சமனப்படுத்தி, ஆரோக்கியத்தையும் தாது விர்த்தியையும் உண்டாக்கி, சிற்றின்பத்தில் மிக மகிழ்ச்சியைத் தரும். துர் அப்பியாசத்தினால் உண்டாகும் பலஹீனத்தைப்போக்கி அபாரமான ஞாபக சக்தியை உண்டாக்கும். 20-வகை மேகரோகங்களையும் போக்கடிக்கும்.

24-நாள் லேகியமும் அயத்தங்க செந்தூரம் புட்டி 1-ம் ரூ. 2—4—0
48-நாள் " " " " 2-ம் ரூ. 4—4—0

நாராயண சஞ்சீவித் தைலம்,—பச்சிலை மூலிகைகளாலும் பசும்பால் முதலிய பரிசுத்த வஸ்துக்களாலும் மிகச் சுத்தமாக செய்யப்பட்டன. தேக வரட்சியைப் போக்கி, மூளையைக் குளிரச் செய்து புத்திக் கூர்மையையும் ஆரோக்கியத்தையும் உண்டாக்கும். கடந்த 25 வருட காலமாய் இதை ஆயிரக்கணக்கானவர்கள் வாடிக்கையாய்வாங்கிஸ்நானம் செய்து தேகாரோக்கியத்தோடு வாழ்ந்து வருகிறார்கள்.

5 பவுண்டு டின் 1-க்கு விலை ரூ. 1—0—0

நாராயண திராட்சைப் பழ லேகியம்:—மலச்சிக்கலே எல்லா வியாதிகளுக்கும் காரணம். இதனால் நமது நாட்டில் கோடிக்கணக்கானவர்கள் அவஸ்தைப்பட்டு அதை சரியாய் கவனிக்காமையினால் அநேக வித நோய்களுக்கு ஆளாவதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம். அதற்கு இது திவ்வியமான மருந்து. சாப்பிடுவதற்கு மிக ருசியாய் இருக்கும். இரவில் படுத்துக்கொள்ளும்போது ஒரு கேச்சக்காய் பிரமாணம் சாப்பிட்டு படுத்துக்கொண்டால் காலையில் மலம் தாராளமாய்ப் போய்விடும். யாதொரு கெடுதலுமில்லை. தேகம் ஆரோக்கியமாயிருக்கும்.

டப்பி 1-க்கு விலை ரூ. 1—0—0

எல்லாவற்றிற்கும் தபால் செலவு வேறு. வெளிநாட்டன்பர்கள் தபால் செலவு சேர்த்து முன்பணமாக அனுப்பவேண்டும்.

ஸ்ரீ நாராயண மெடிகல் ஹால், காஞ்சீபுரம்.

குடி அரசு புத்தகாலயம்.

பேயோ கூற்று மெய்யா பொய்யா	0—4—0
ஞானசூரியன் (அச்சில்)	
இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம்	0—4—0
மனு நீதி மர்மம் ...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு. ...	0—2—0
சோதிடப் புரட்டு. ...	0—2—0
திருக்குறள் ...	0—8—0
திரு. ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டு சொற்பொழிவு ...	0—2—0

8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, 5 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

இதுவரையில் தமிழில் வெளிவராத புஸ்தகம்

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன்



அநுபோகப்பயிற்சிமுறையும்

விலை ரூபா 1—8—0

(தபால் சார்ஜ் வேறு)

வெளிநாட்டு ஆர்டர்களுக்கு முன் பணம் அனுப்ப வேண்டும்.

மோட்டார் ஸ்கூல் (1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

இங்கு 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிஸம் கற்றுக் கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
(11) மைலாப்பூர், சென்னை

ஏழு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்த வைத்திய சங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!!

முப்பு சேர்ந்த மருந்துகள்.

நீங்கள் என்றுமழியாத இளமைப்பருவத்தை அடைய வேண்டுமானால் பழனி சி. எம். சாமி

மகா வீரிய தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்

தாதுபுஷ்டியில் மன்மதனுக் கோப்பானவர்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

தாதுபுஷ்டியில் சிறந்தது. மகான் அருளால் கிடைக்கப்பட்டது. வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், சூலை, முதலிய வியாதிகளும் நீங்கும். அழிந்துபோன ஆண்மையையும் இழந்த பலத்தையும் இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வயோதிகனை வாலிபனாக்கி சதா பரமானந்தத்தை கொடுக்கக்கூடிய அபூர்வ சக்தி இருப்பதால் இதன் அரிய குணத்தைக் கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

48 நாள் பஸ்பம் ரூபா 20—0—0. 24 நாள் பஸ்பம் ரூபா 10—0—0.

குரு அப்ரேக் செந்தூரம்- நீரழிவுக்கு.

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும், தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் க்ஷயரோகமும் நீங்கும். தளுக்கற்றது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 15.

குரு தாளக பஸ்பம்-இருமலுக்கு

காசம். க்ஷயம், சளி, இளைப்பு இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8-வித காசமும் க்ஷயமும் தீரும். அநுபவத்தில் கை கண்டது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 8.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேச வாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும் போது முன்பணம் ரூ 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழநி, S. I.

ஜாம்பாநுபூதி சந்தோஷாநுபவம் தரும்

ஜனோபகாரி தைலம்.

இத்தைலமானது 27 வகையான மூலிகைகளால் செய்யப்பட்டது. அநேக நற்சாட்சிகள் பெற்றது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

நல்ல குளிர்ந்த வாசனையுள்ள தைலம்.

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:- தீராத தலைக்கனம், ஓயாத மண்டையிடி, ஒருதலைக்குத்து, தலையரிப்பு, முடிகழிதல் இவைகளை நீக்கிக் கூந்தலை வளரச் செய்யும். காதிரைசல், காதடைப்பு, குத்தல், கணைவலி, எரிவு, கூச்சம், நீர்வடிதல், சிகப்பு விழுதல், நாசியிலிருந்து மஞ்சள்நிறத் தண்ணீர்வடிதல், ஓயாத தும்மல், சிராபோல் விழுதல், வாய்க்கசப்பு, புளிப்பு, துர்க்கந்தமடித்தல் முதலிய வியாதிகள் நீங்கி தேகத்திற்கு சுகம் உண்டாகும். கண்டத்துக்குமேல் ஏற்படக்கூடிய 96 வியாதிகளும் தீரும்.

பெரிய டின் ரூ. 1—12—0 | தபால் சார்ஜ் வேறு.
சிறிய டின் ரூ. 1— 0—0 |

பார்சவாய்வு மருந்து.

விதை வாய்வு, நரம்புத்தடிப்பு, வலி, வீக்கம் முதலிய விதை சம்மந்தமான சகல வியாதிகளுக்கும் இந்த மருந்தை உபயோகியுங்கள். பத்தியம் கிடையாது. பெண்கள் அண்டவாய்வுக்கும் உபயோகிக்கலாம்.

14 வேளை மருந்து ரூ. 1—0—0, தபால் சார்ஜ் வேறு.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாட்டு சேயர்கள் வி. பி. செலவு சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும். நீங்கள் கடிதம் எழுதும்போது தெளிவாய் அச்செழுத்தைப்போல இங்கிலீஷிலோ தமிழிலோ எழுதவேண்டும். சோல்ஏஜண்டுகள் தேவை. விபரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளவும்.

உ. கா. நாகூர்மீரான் அண் பிரதர்,
7-வது தெரு, ஏர்வாடி போஸ்டு,
(14) திருநெல்வேலி ஜில்லா, [தென்னிந்தியா.]

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

சர்: டோராப் ஜே டாட்டா. Kt.

மூலதனம்:

அனுமதிக்கப்பட்ட மூலதனம்	... ரூ.	6,00,00,000.
பதிவு செய்யப்பெற்ற ,,	... ரூ.	3,56,05,275,
வசூலான ,,	... ரூ.	71,21,055.

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது:
"நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தை கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமை உண்டு"

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,
4, முதல் லைன்பீச், சென்னை.

நிமிஷாசானத்தில் குணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனை செய் ஆச்சரிய நிவர்த்தி!

சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைசசல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.

தபால் கூலி அணா. 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9—0—0
6 டின் விலை ரூ. 5—4—0 3 டின் விலை ரூ. 3—0—0.
F. M. S. முதலிய ஊர்களுக்கு முன்பணம் ரூ. 2—8...0.
இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.
புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S.

தமிழரசு.

ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை.

(சித்திர வர்ணப்படங்களுடன்)

உலக முழுவதும் நடைபெறும் அரிய இனிய நிகழ்ச்சிகளை உள்ளபடி உணர்த்தும்; அறிவை வளர்க்கும். பெரிய உண்மைகளை அழகிய முறையில் தெள்ளிய செந்தமிழ் நடையில் நன்கு புகட்டும். அரசியல் துறையில் தனக்குத் தோன்றியவற்றை அவா அச்சமின்றி எடுத்து உரைக்கும்; வியாபார நுணுக்கங்களை அவ்வப்போது விவரிக்கும்; வைத்திய நுட்பதிட்டங்களை வகுத்துக்காட்டித்தெரிவிக்கும். இதனைப் படிப்போர் தமிழறிவு, சமயசாத்திர ஞானம், ஆசார சீர்திருத்த உண்மைகள், அரசியல் முறை, உலக நடை முதலியவற்றை ஒழுங்காக உணரலாம்.

மாதிரி பிரதி இனாம்.

வருட சந்தா | உள்நாடு ரூ. 3—0—0
| வெளிநாடு ரூ. 4—0—0

ஆசிரியர்:—மணி திருநாவுக்கரசு முதலியார்.
உபபத்திராதிபர்:—திரிசிரபுரம் நடராஜன்.

தமிழரசு காரிய நிலயம்,
31 வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

கடவுள் கடவுளென காசைத் தொலைக்காதே

"உண்மைவிளக்கம் பதிப்பகத்தில்" அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.